T. 2707

MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS SERIES

NO. 56

©

GOVERNMENT OF MADRAS

# KĒRAḶA-DESA-VARALAṚU

# கேரளதேச வரலாறு

EDITED BY

**T. CHANDRASEKHARAN**, M.A., L.T.,

*Curator, Government Oriental Manuscripts Library, Madras*

AND

**THE STAFF OF THE LIBRARY**

PUBLISHED UNDER THE ORDERS OF THE GOVERNMENT OF MADRAS

**1960**

Price Rs. 1—70

Printed at the
RATHNAM PRESS (BRANCH)
65, Tiruppalli Street, Madras-1

# INTRODUCTION

The public are perhaps aware of the fact that the Government of Madras have launched upon a scheme of publication of rare manuscripts treasured in two premier institutions of this state, namely, the Madras Government Oriental Manuscripts Library, Madras and The Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore. Financial help has also been extended to Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar, Madras, for similar purpose. Though the publication of rare manuscripts was started by the Government of Madras as early as 1909, only 12 works were taken up for publication till 1942. Of these, the printing of 3 works has not yet been completed.

Only in the year 1949—50, a regular scheme for the publication of manuscripts was prepared and accepted by the Government of Madras under the MADRAS GOVERNMENT ORIENTAL SERIES. This scheme included the mauuscripts in all the South Indian Languages in which there are manuscripts in the Library. The selection of manuscripts was done by an Expert Committee appointed by the Government specially for this purpose. Till now 157 manuscripts in different languages have been printed. Of these, 35 manuscripts are from Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore and 2 from Dr. U.V. Swaminatha Iyer Library, Adyar. In addition, 3 manuscripts, two from this library and 1 from the Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar. are in the press.

While all the manuscripts under the Madras Government Oriental Series were edited by various scholars drawn from different learned institutions, the publication of manuscripts under the Madras Government

Oriental Manuscripts Series was resumed in the year 1950—51. All the manuscripts published under this Series before 1942 were in Sanskrit. But from 1950—51, they included the manuscripts in other languages also. These are edited by the Curator with the assistance of the Pandits in respective languages. Till now 60 works have been printed including the total number of 51 since 1951.

Since 1958—59 however no fresh manuscripts were taken up for publication in both the Series. There were several proposals for the printing of manuscripts. Of these, the Government of Madras have now sanctioned the publication of the following 7 Tamil Manuscripts in G. O. No. 81859/-E6/59-15, Education, dated 5—1—1960 communicated in Proceedings RC. No. 138-K2/60 dated 27—1—1960 of the Director of Pubiic Instruction, Madras.

## I. GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

1. Tani-p-Pāḍalkaḷ.
2. Kēraḷa Dēśa Varalāṟu.
3. Yāpparuṅkala Virutti (with Kuṟippurai).
4. Kaṭṭabomman Varalāṟu.
5. Paḷamoḷi-t-Tiraṭṭu.
6. Kalambaka-k-Kottu.
7. Uttara Rāmāyaṇa Nāṭakam.

## II. Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY, ADYAR, MADRAS.

1. Manuvijñānēśvariyam.
2. Śuddhānanta Bharatam.

Of the 7 manuscripts from this library, Paḷamoḷi-t-tiraṭṭu has been dropped as it was found to contain many archaic proverbs. The entire publication

has been recommended for aid from the Government of India under the scheme for the Development of Modern Indian Languages. It is also hoped that the Government of India aid will be forthcoming in due course Since the amount has to be reimbursed from the Government of India, it was ordered that the expenditure on the scheme should be incurred before 31-3-1960. Though the time actually available for getting the manuscripts printed is less than 2 months, the publication has been started in right earnest and every possible efforts are being made to complete the same before the stipulated time. There has, however, been one change in the scheme of publication as submitted by the Curator on account of the limited time available. Originally the above manuscripts were intended to be edited by outside scholars under the Madras Government Oriental Series but now they have been edited by the Curator himself with the assistance of the Tamil staff of the Library under the Madras Government Oriental Manuscripts Series.

On account of the great speed with which the press copies were prepared, edited and rushed through the press, a few mistakes might have crept ir. It is hoped that the learned scholars who read the works will make necessary corrections, if any.

In this connection, I will be failing in my duty if I do not express my thanks to the Controller of Stationery and Printing, Madras, for scrutinizing the quotations of the private presses, for supplying the required paper for printing, for passing the printing bills from the presses in a very short time and for taking up the printing of the biggest of the six manuscripts in the Government Press itself.

This edition is based upon a Paper Manuscript of this Library bearing No. D. 3301, which has been restored on paper under No. R. 401. My thanks are due to Sri V. S Krishnan, Tamil Pandit of this Library for helping me in editing the manuscript before giving it to the press. The Government of India have to be thanked for their kind grant to the Government of Madras for enabling the Government Oriental Manuscripts Library, Madras, to get printed this invaluable manuscript. The Rathnam Press, (Branch), also deserves my thanks for printing the manuscript neatly in a very short period of less than a month

Madras-5, 1—3—60

T. CHANDRASEKHARAN,
Curator.

# முன்னுரை

கேரள தேச வரலாறு என்னும் இந்நூல், மலையாள நாட்டில் முன்பு இருந்த நிலையை எடுத்து விளக்குகின்றது. இது பலர் வாயிலாகக் கேள்விப்பட்ட செய்திகளைத் தொகுத்து எழுதப்பெற்ற ஒரு நூல் எனத் தெரிகின்றது. இந்நூலில் கூறப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் நன்கு விளங்கும் முறையில் இல்லை. விளங்கிய வரையில் தொகுத்துக் கீழே கொடுத்துள்ளேன்.

கலியுகம் தொடங்கி 3446-ஆம் ஆண்டு குலசேகரப்பெருமாள் என்னும் அரசர் திருவஞ்சைக்களம் என்ற தலத்தை அமைத்தார். இந்தக் குலசேகரப் பெருமாள், வைணவ சமய ஆழ்வார்களில் ஒருவர் எனத் தெரிகின்றது. இவர் பதினெட்டு ஆண்டுகள் கேரளப் பகுதியை ஆண்டு வந்தாராம். இவர் தமது இறுதிக் காலத்தில் இராச்சியத்தை அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். ஏனெனில், வேற்று நாட்டிலிருந்து அரசர் எவரேனும் வந்து நாட்டைப் பரிபாலனஞ் செய்ய நேர்ந்தால், நாட்டிலுள்ள மக்களின் பழக்க வழக்கங்களுக்கு இடையூறு ஏற்படலாம் என்று எண்ணினார். இவர், மலையாள நாட்டில் வசிக்கும் அந்தணர்கள் எவரும் சத்தியநெறிக்குத் தவறாகப் போகக்கூடாது என்று நியதி செய்தாராம். இவர் (குலசேகரப் பெருமாள்) காலத்துக்கு முன்பு மலையாளத்தில் சாத்திரங்களில் தேர்ந்தவர்கள் இல்லை. அதனால் இவர் சாத்திரங்களில் தேர்ந்தவர்களைக்கொண்டு எல்லோருக்கும் கற்பிக்கச் செய்தார். அந்தணர்கள் இன்ன இன்ன முறையில் சாத்திரங்களைக் கற்க வேண்டும் என்று திட்டம் செய்தார்.

சாத்திரங்களில் சொல்லப்பட்ட கர்மங்களை ஒழுங்காகப் பாதுகாத்து அதன்படி நடப்பவர் சாஸ்திரிகள் எனப்பட்டார்.

குலசேகரப் பெருமாளுக்குப் பிறகு, மலையாள நாட்டைப் பரிபாலிப்பதற்கு அரசன் வேண்டும் என்று மக்களெல்லோரும் கூடி ஆலோசனை செய்தார்கள். அங்கிருந்து சில அந்தணர்கள் புறப்பட்டு வேற்று நாட்டுக்குப்போய், கிருஷ்ணராயரைக் கண்டு, தமது நாட்டையாள, அரசர் ஒருவர் வேண்டும் என விண்ணப்பித்தனர். அவர், பன்னிரண்டு வருஷம்வரை ஆளும்படி

உத்தரவிட்டு அதிராசப் பெருமாள், பாண்டியப் பெருமாள் என்ற இருவரையும் மலையாள நாட்டுக்கு அனுப்பினூர்.

இவர்களுக்குப் பிறகு, சேரமான் பெருமாள் என்பவர் மலையாள நாட்டை யாண்டார். இவர் தமது திறமையினாலே முப்பத்தாறு ஆண்டுகள் அரசாட்சி செய்தார். இவர் காலத்தில், சேரமான் பெருமாளுடன் போரிட்டு வெற்றி பெறவேண்டும் என்று எண்ணிக் கிருஷ்ணராயர் மலையாள நாட்டின்மீது படையெடுத்தார். இதனைக் கேள்வியுற்ற சேரமான் பெருமாள் திருக்காரியூர் என்ற தலத்தில் உள்ள பொன்மண்டபத்திலே தம் நாட்டின் பதினேழு பகுதிகளிலுமுள்ள மக்களை வரவழைத்து ஆலோசனை செய்தார். புந்தூர் என்னு மிடத்திலிருந்த மானீச்சன், விக்கிரமன் என்னும் ஏருடிச் சாதிக்காரர் இருவரை அழைத்துவந்தால் பகைவரை எளிதில் வெல்லலாம் என்று அங்குக் கூடியிருந்த அனைவரும் கூறினர். பின்பு, அவர்களை யழைத்துவரச் சிலர் சென்றனர். மானீச்சன், விக்கிரமன் என்ற ஏருடிமார்களும், உண்ணிக்குமரன் நம்பியார் என்பவரும் பல ஆயிரக்கணக்கான மக்களுடன், கிருஷ்ணராயர்படைகளை எதிர்த்து முறியடித்தனர். பகைவர்கள் தோற்று வேற்று நாட்டுக்கு ஓடினர். போரில் வெற்றிபெற உதவிய ஏருடிமார் இருவருக்கும், உண்ணிக்குமரன் நம்பியாருக்கும் தக்க பரிசுகள் கொடுத்து அனுப்பினூர் சேரமான் பெருமாள்.

இவர் காலத்தில் ஸ்ரீமகாதேவருடைய புத்திரராக மிக்க தவ வலிமையுடைய சங்கராசார்ய ரென்பவர் அவதரித்தார். இவர் மக்களுக்குப் பல ஒழுக்க முறைகளை வரையறுத்தார். அவ்வொழுக்கமுறையினின்று பிறழ்பவர்களுக்கு இன்ன தண்டனை எனவும் ஏற்படுத்தினூர்.

சேரமான் பெருமாள், சங்கராசாரியார் திட்டம் செய்த வண்ணம், அரசாட்சியை ஒழுங்காகப் பரிபாலித்து வந்தார். பின்பு, அரசாட்சியைவிட்டு விலகி முத்திநெறிக்குரிய நற்செயல்களைச் செய்ய ஆவல்கொண்டார். பலரையும் கூட்டி ஆலோசித்தார். மலையாள ராச்சியம் முதலில் ஸ்ரீபரசுராமனூல் அமைக்கப்பட்டது. கன்னியாகுமரி முதல் கோகர்ணம்வரை இந்நாட்டிற்கு எல்லையாகும். மலையாள ராச்சியத்துக்கு வடவெல்லை கன்னெற்றிப் புதுப்பட்டணம். தெற்கே சங்கலபுரம் என்றவிடத்தி

லுள்ள அகழி. மேற்கே புதுப்பட்டணம் என்றவிடத்திலுள்ள அகழி. மேற்கும் கிழக்கும் கணவாய்கள். இந்த ராச்சியத்தில் பதினெட்டு அழிமுகங்கள். (அழிமுகங்கள் : துறைமுகங்கள்) பதினெட்டுக் கணவாய் வாசல்கள், தொண்ணூற்ருறு நகரங்கள், நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு ஈசுரன் கோவில்கள், நூற்றெட்டுத் துர்க்காலயம், ஆயிரத்தெட்டு ஆயுதசாலைகள், அறுபத்துநாலு கிராமங்களும் அடங்கியுள்ளன.

தாம் முத்திநெறியை விரும்பியதால் சேரமான் பெருமாள், இந்த ராச்சியத்தைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். நிலங்கள் வாங்குதல், ஒற்றிவைத்தல், மாட்டு வியாபாரங்கள், கப்பல் வியாபாரங்கள் முதலானவைகள் எவ்வண்ணம் நடைபெற வேண்டுமென இவர் காலத்தில் திட்டம் செய்யப்பெற்றன.

பின்பு, கள்ளிக்கோட்டு ராசாவாகிய உண்ணிக்குமரன் நம்பியாரையும், மானீச்சனையும், விக்கிரமனையும் அழைப்பித்துத் தக்க மரியாதைகள் செய்தார். மானீச்சனுக்குக் குந்நனக் கோனுதிரி ரரசா என்ற பெயரைச் சூட்டினுர். இவரே கள்ளிக் கோட்டு ராசா ஆவர்.

சேரமான் பெருமாளுக்குப் பிறகு குந்நனக்கோனுதிரி ராசா என்பவர் போரளராசா என்பவரையும் அரையில் குறியன் என்பவனையும் வெற்றிகொண்டு மக்களின் தேவைகளை உணர்ந்து நன்கு ஆட்சி செய்துவந்தார். இவர் காலத்தில் இராச்சியம் அறுபத்துநான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இன்னும் அரசாங்க சம்பந்தமாகச் செய்யவேண்டிய ஒவ்வொரு செயலுக்கும் ஒரு நியதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நாட்டில் ஸ்ரீபரசுராமன் ஏற்படுத்திய கட்டளைப் படியே எல்லாம் நடைபெற்று வந்தன. இன்ன இன்ன செயல்களை இவ்விவ்வாறு செய்யவேண்டும் எனப் பரசுராமர் திட்டம் செய்தனர். "மாமாக வேலை" என்னும் பெரியதொரு திருவிழா இங்கு நடந்துவந்தது என இந்நூலில் கூறப்பட்டுளது. மகாமகம் என இப்பொழுது நடைபெறும் திருவிழாப் போன்றது அது எனத் தெரிகின்றது.

ஸ்ரீபரசுராமன் மலையாளநாடு ஏற்படுத்தியதுபற்றி இந்நூலுள் பின்வருமாறு கூறப்பட்டுளது.

நான்கு யுகங்களிலும் பல அரசர்கள் தோன்றி உலகில் ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்களில் கொடியவர்ளகான அரசர்

களை ஒழிப்பதற்காக ஸ்ரீபரசுராமன் அவதரித்தார். இருபத்தொரு முறை அரசர் குலத்தை வேரறுத்தார். இந்தப் பழியை (வீர அத்யாதி தோஷம்) நீக்குவதற்காகக் கோகர்ணம் என்ற தலத்தை யடைந்தார். இங்குள்ள கல்மலைமேலிருந்துகொண்டு வருண தேவனை வணங்கி, பூமிதேவியை வந்தனம்பண்ணி, சமுத்திரத்தைச் சிறிது, விலகிப்போகுமாறு செய்து அறுபது காதம் பூமியை உண்டுபண்ணினார். இதுவே மலையாளம் என்பது. இந்த நாட்டுக்கு ரட்சை வேண்டுமென்று எண்ணிக்கொண்டு நூற்றெட்டு ஈச்வரப் பிரதிஷ்டை செய்தார். அதன்பிறகும் பூமியின் நடுக்கம் விடவில்லை. பலநாடுகளினின்றும் அந்தணர்களைத் தருவித்துக் கேரளத்தில் குடியேற்றினார். பாம்புகளினால் தொல்லைகள் மிகுதியாயிருந்ததால் அந்தணர்கள் பலரும் திரும்பிச் சென்று விட்டனர். பின்பு ஸ்ரீபரசுராமன் பிரம்ம சொத்திலிருந்து ஒரு பங்கு எல்லாவிடத்திலும் துன்பஞ்செய்த சர்ப்பங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், அவை அங்கு தலதெய்வமாக இருந்து அனைவரையும் ரட்சிக்க வேண்டுமென்றும் உத்தரவு செய்தார். சர்ப்பங்களுக்கு மகிழ்ச்சி யுண்டாகி, அவைகள் தலத் தெய்வமா யிருந்தபடியினால் மலையாளத்தில் பாம்புத் தொல்லைகள் நீங்கின.

இன்னும் பல ஒழுங்குகளையும், திட்டங்களையும் ஸ்ரீபரசுராமன் மலையாளத்தில் ஏற்படுத்தினார்.

இங்ஙனம் பல செய்திகள் இந்நூலினுள் விரிவாகக் கூறப் பெற்றுள்ளன. இந்நூல் முற்றுப்பெறவில்லை. கிடைத்தவரையும் பயனுள்ளதாகவே உள்ளது. (அக்காலத்திய மலையாளநாட்டு நடைமுறைகளையும், அரசாட்சி முறைகளையும் இந்நூலினால் நன்கு உணரலாம். ( நடை மிகவும் சாதாரணமானது. மூலப் பிரதியில் உள்ளவாறே பதிப்பித்துள்ளேன்.

இது, இந் நூல்நிலைய மூவருடக் காட்டலாக்கு 401-ஆம் எண்ணில் விவரணஞ் செய்யப்பெற்றுள்ள காகிதக் கையெழுத்துப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்படுகின்றது. இப்பிரதி, டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 3301-ஆம் எண் பிரதியிலிருந்து பிரதிசெய்யப்பட்டதாகும்.

சென்னை,
4—3—1960

தி. சந்திரசேகரன்.

# கேரளதேச வரலாறு

---

[கலி 3446] வருஷத்திலே குலசேகரப் பெருமாள் திருவஞ்சக்குளம் [திருவஞ்சைக்களம்] முக்கால் வட்டம் க்ஷேத்திரம் உண்டுபண்ணினர். பிற்பாடு பதினெட்டு வருஷம் ஆன போது குலசேகரப் பெருமாள் இறந்து போனர். அந்தப் பெருமாள் ராஜ்யத்தை (அ)[எ]ல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். அதற்குக் காரணம், இன்னொரு வேளை ஒருவருடைய ஜனங்கள் வந்து ராஜாவைப் பிரமைபண்ணி/சத்யம் தப்பிப்போனல் பிராமணர் பரதேசத்துக்குப் போக வேண்டி வரும்; அது வரலாகாது என்று எண்ணிக்கொண்டு எல்லோருக்கும் ஐங்காதம், முக்காதம் வைத்துப் பங்கிட்டுக் கொடுத்தார். ஒருவனுக்குச் சத்தியத்தப்புவந்தால், இந்தக் கர்ம பூமி ஈரணமாய்ப்போம். அப்படி வராமலிருக்க வேண்டுமென்று அந்தக் குலசேகரப் பெருமாள் எண்ணிக் கொண்ட கார்யம்....... ..................வந்த சாஸ்திரிகளிலே பட்டாசாரியர் என்றவருக்குப் பட்டமனைச் சிலவுக்கும் கொடுத்து வைத்துக் கொண்டு மலையாளத்திலேயிருக்கப்பட்ட பிராமணருக்குச் சாஸ்திராப்யாசத்தைப் பண்ணி வைத்தார். அதென்னதினலென்றல், முன்னே முன்னே மலையாளத்திலே சாஸ்திராப்பியாசமில்லாத படியினலே அப்பொழுது பரதேசத்திலேயிருந்து ஒரு ஆசாரியர் வந்து பட்டாசாரியிடத்திலே படித்தார்........................ பருபிராபாகர குருக்கள் அவர் பிரபாகர சாஸ்திரத்தைப் ....................மற்று முண்டான ஆசாரியமார் படிப்பு படித்து போன....... ..............பிரபாகர சாஸ்திரத்தை அப்யாசம் பண்ணுவிக்கிற வரு ................ணம் வேண்டு மென்று எண்ணிக்கொண்டு குலசேகரப் பெருமாளு......................யே(பா)மூயிரக்கலம் வித்து விதைக்கப்பட்ட பூமியையும் உதயதுங்கன்......................ன்கிற செட்டியுடனே ஐயாயிரக்கலம் வித்து விதைக்கப்பட்ட பூமியையும் கூடிப் பன்னீராயிரம் கலம் வித்து விதைக்கப்பட்ட பூமியைப் பிரபாகரகுருக்கள் புஷ்பமும் நீரும் வாங்கினர். அது, பட்டாசாரியரல்ல - குலபட்டாசாரி

யாயிருந்த ஸ்தலத்திற்கு[ப்] பாட்டம் என்று சொல்லுகிறார். பட்டாசாரியருடைய சீடனாயிருக்கப்பட்ட பிரபாகர குருக்களுடைய பாத[க்]கு [ற]டு இப்பவும் அங்கே இருக்கிறது என்று பிரசித்தமாய்ச் சொல்லுகிறார். பிரபாகர குருக்கள் பூ வாங்கின பூமியானபடியாலே பாட்டப் பிரபாகர(வ்)வியாகரணம் படித்தவர்களுக்கு அல்லாமல் பிரம்மச்சுவம் பன்னீராயிரங்கலம் பூமியிலே பங்கு, வேதாந்திகளுக்கு இல்லை. திறக்கண்ணாபுரம் கோயிலிலே காணிக்கை உண்டி பாட்டப் பிரபாகர வியாகரணம் க(த்த)[ற்ற]வருக்கு மாத்திரந்தான். வேதாந்திகள் வேதாந்தத்தைப் படித்தாலும் பாட்டப் பிரபாகர வியாகரணத்திலே மூன்றுக்கு ஒரு பங்காகிலும் கற்க வேண்டும். இரண்டாந்தரம் சாஸ்திரம் கற்பிப்பிக்கிறதற்காக திறக்கண்ணாபுரத்திலே காணிக்கை உண்டி அனேகம் ஜனங்கள் உண்டுபண்ணியிருக்கிறார். அதிலே வேதாந்திகளுக்கும் பங்கு உத்திரவு பண்ணியிருக்கிறார். பிற்பாடு குலசேகரப் பெருமாள் சொர்க்கத்திற்குப்போனார். ராஜ்ஜியமும் அனேக ஜனங்களுக்கு ஆ(ய)[கி] வந்தது. அப்பொழுது, ராஜ்ஜியத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொள்கிறதற்குப் பிரயாசை யென்றும், நம்முடைய கையில்தானே பலமில்லாவிட்டால் போதாது என்றும், அறுபத்து நாலு கிராமத்துப் பிராமணர்களும் கூடி ஆலோசனை பண்ணிக்கொண்டு பத்த(ர)[ர்] கிராமத்தைக் கத்தியெடுக்கிறதற்காக உண்டு பண்ணினார். மேலும் திறக்காரியூரில் திறக்கோட்டிலிலேயிருந்து, அறுபத்து நாலு கிராமத்துப் பிராமணர்களும் யோகம் சேர்ந்து நிச்சயம் பண்ணிக்கொண்டு மணலத்து அத்திக்கால் அறுபத்துநாலு கிராமக்காரரும் யோகம் சேர்ந்து அதில் பத்த(ர)[ர்] கிராமக்காரர் ஆயுதமெடுத்தார். ஆயுதமெடுக்கிற பொழுது எட்டாக்கிராமக்காரர் மாத்திரம் ஒன்றாகி ஆயுதமெடுத்தார். அவட்டிப்புத்தூராரும் (யோற்று) [ஏற்று] மானூராரும் ஆலோசனை நிச்சிதத்துக்குமாத்திரம் கூடியிருந்து பிறகு எல்லோருடனேயும் ஆயுதமெடுக்கிறதற்கு அனுமானப்பட்டார். எல்லோரும் எடுத்தபோது தங்கள் தமக்குத்தானே எடுத்தார். இந்த ஆயுதம் தொட்டவர் கர்மத்தைப் பண்ணி, தர்மத்தை ரக்ஷிக்க வேண்டியதென்றும், ஆயுதமெடுத்தவர்களுக்குப் பாதிபோசனமும் புண்ணியாதானமும் தாயாதி கர்மமும் செய்ய வேண்டியதில்லை [யென்றும்] தேசத்துப் பிராமணரும் கூடி அப்பொழுது சத்யம் பண்ணினார். [அப்பா]லே

யிருக்கப்பட்ட ஜனங்கள் எல்லோரும் ஆயுதபாணியாய் யிரி.....................மென்று சொல்லுகிறது. சே(ம்)மூண்ட கிராமத்தில் அரை.....................இவர் பரிபாலனம்..................... ரானபடியினலே சாஸ்திரிகள் என்று பெயர் சொல்லுகிறார். சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட கர்மங்களை பாலிப்பவரானபடியினலே **சாஸ்திரியர்** என்று சொல்லுகிறார். ராஜ்யத்தை ரக்ஷிக்கிறதற்குக் கையிலே கத்தி யுண்டானபடியினலே அந்த ஆயுதத்திற்கு சாஸ்திரியள் என்று சொல்லுகிறார். பிராமணர்கள் சத்தியம் செய்யவேண்டின இடங்கள் மலையாளத்திலே கோகர்ணம், தி(ற)[ரு]ச்சி[வ]ப்பேரூர், திருநாவாய், திருக்காரியூர், திருக்கண்ணபுரத்(து)ம், திருவஞ்சிக்குளம், இருங்காணிக்குடை, (ஐ)[அ]யிராணிக்குளம், வெள்ளப்ப நாட்டிலே மண்டலத்து அத்திக்கல் இப்படி பிராமணருக்குப் பத்து ஸ்தலத்திலே சத்தியம். பதினென்று கிராமக்காரருக்கு சோமாகுதியிருக்கின்றது. விவரம் ; சோவுரம், பெருமணம், இருங்காணிக்குடை, ஆலத்தூர், மூழிக்குளம், ஐயிராணிக்குளம், உளியனூர், செங்கனூர், பெருஞ்செல்லூர், கரிக்காடு, பையனூர், இவர்களுக்கு மாத்திரம் சோமாகுதியிருக்கிறதுகள். அறுபத்துநாலு கிராமத்திலே சோவுரம், பெருமணம், இருங்காணக்கு(டே) [டை], ஆலத்தூர், பெருஞ்செல்லூரு, கரிக்காடு இந்த ஆறு கிராமக்காரரும் சரி சமானமானவர், ஒன்று போல சம்மதி. பள்ளியாறுக்கு வடக்கே அந்யோந்யம் தங்களிலே சித்திரமாயிருப்பார்கள். தெற்கு வடக்கு சம்மதி ஒன்று போலேதான். ஆறுகர்மமானது—அத்யாபனம், அத்யயனம், (ஓரத்தும்) [ஹோத்ருத்வம்] (பிச்சையும்) இஜ்யையும், தானமும் பிரதிக்ரகமும். பாட்டமென்கிறது கோவில் மணியம். சமுதாயம் என்கிறது மேற்படி சின்னமணியம். சாந்தி என்கிறது பூசை, இவைகளே. இதற்கு வடக்கேயிருக்கப்பட்ட ஜனங்கள் சைவர்கள். அதிலே மகா ஸ்தலங்களிலே குறும்பறநாட்டு ஆறு கிராமத்துக்கு ஜனங்களே அதிகமாய்க் காணப்படுகிறது. இப்படி அறுபத்துநாலு கிராமத்துப் பிராமணரும் தளியாதிரிமாரும் கூடி சிறிதுநாள் பரிபாலனம் பண்ணினர். அதன் பிற்பாடு அறுபத்து நாலு கிராமத்துப் பிராமணர் எல்லோரும் கூடி யோகம் சேர்ந்து திருக்காரியூர்க் கோவிலிலே சங்கமிருந்து ராஜ்யபரிபாலனம் பண்ணுகிறதற்கு ராஜாவேண்டுமென்று நிச்சயம்பண்ணி பரதேசத்திற்குப் போய் கிருஷ்ணராயரைக் கண்டு ராஜ்ய பரிபாலனம்

பண்ணுகிறதற்காக ராஜா வேண்டுமென்று சொன்னார். அப்பொழுது பன்னிரெண்டு வருஷம் ஆளுகிறதற்கு சங்கியையைச் சொல்லி அதிராஜப் பெருமாளையும் பாண்டியப் பெருமாளையும் உத்திரவு பண்ணியனுப்பினார். அவரும் ஆண்டு கொண்டு போனபிற்பாடு பின்னையும் பிராமணர் பரதேசத்துக்குப் போய் ராயரைக்கண்டு பன்னிரெண்டு வருஷம் ஆளுகிறதற்காக சேரமான்பெருமா ளென்கிற ராஜனை அழைத்துக்கொண்டு வந்தார். சேரமான்பெருமாளும் பிராமணரும் கூடி வருகிறபோது வர்சுதேவப்பேரியென்கிற மகாபாரத பட்டதிரியைக் கண்டார். அறுபத்துநாலு கிராமத்துப் பிராமணர்களும் திருக்காரியூர் பொன்மண்டபத்திலே சங்கியையைச் சேர்ந்திருந்து நூற்றறுபது காதம் வழி ராஜ்ஜியம்......................க்கு இராய தீட்டு என்கிற சம்மதித்திட்டும், ஏகசக்கிராதிபதி..................கு ரக்ஷித்துக் கொள்ளுகிறதற்கு நிச்சயம் பண்ணி புஷ்பமும் நீரும்......................பெருமாளென்கிற ராஜாவிற்குக் கொடுத்தார். அன்றைக்கு கலி..................சேரமான் பெருமாளுடைய குணதிசயத்தினலே முப்பத்தியாறு வருஷம் ராஜ்யம் ஆண்டார். பிராமணர் பரதேசத்துக்கு வந்ததுமில்லை. சேரமான் பெருமாளைக் கண்டதுமில்லை என்று எண்ணிக்கொண்டு கிருஷ்ணராயர் மலையாள ராஜ்ஜியத்தை ஜயம்பண்ண வேண்டுமென்று தண்டு எடுத்தார். அதற்காக அறுபத்துநாலு கிராமத்துப் பிராமணரும் சேரமான்பெருமாளென்கிற ராஜாவும் திருக்காரியூர் ஸ்தலத்துப் பொன்மண்டபத்திலே சங்கம் சேர்த்து ஆலோசனை பண்ணி பதினேழு ராஜ்யத்து ஜனங்களையும் அழைப்பித்தார். பின்னையும் திக்விஜயம் பண்ணுகிறதற்கு யாரிருக்கிறரென்று ஆலோசனை பண்ணுமளவில் புந்தூரென்கிற இடத்திலே அதிக சாமர்த்தியமுடைத்தானவர் மானீச்சன் என்றும், விக்கிர(வ)[ம]ன் என்றும் ஏருடியென்கிற சாதிக்காரர் இரண்டு பேரிருக்கிறர்கள். அவரை யழைத்துக்கொண்டு வந்தால் சத்துருவை ஜயம் பண்ணுவாரென்று எண்ணிக்கொண்டு அவரை அழைத்துக்கொண்டு வருவதற்காக இரண்டுபேர் ஆரியப் பிராமணரென்கிறவருடைய கையிலே அடையாளமென்கிற எழுத்தை எழுதிக்கொடுத்து அனுப்பிவைத்தார். ஆரியப் பிராமணர் புன்துறைக்குப் போய் மானீச்சனையும் விக்கிரவனையும் தேடுமளவில் அவர் எழுத்துப் (பள்ளி) பள்ளிக்கூடத்தில் இருக்கிறர்கள் என்று சமாசாரம் கேள்விப்பட்டு ஆரியப்

பிராமணர் அங்கே போய் மானீச்சனையும், விக்கிரவனையும் அவருக்குப் படிப்பு சொல்லுகிறதொரு வக்களத்தில் உண்ணிக் குமரன் நம்பியாரையும் கண்டார். அவர் கையிலே அடையாளம் என்கிற எழுத்தையும் கொடுத்துச் சமாசாரத்தையும் சொன்னார். அவரையு மழைத்துக்கொண்டு வருகிற சமயத்தில், வெண்சால் என்கிற கரம்பிலே வெண்சாலப்பேரால் என்கிற அரசமரச்சாலையிலே காஞ்சிரமென்கிற எட்டிமரத்தின்கீழ், குடையும் வைத்துக் கொண்டு (இ)[ஆ]ழ்வான்சேரி தம்பராக்கள் என்கிற பிராமணோத்தமனும், அவருடைய தேவர் நம்பூ[தி]ரியென்கிறவரும் கிழக்குமுகமாய் அந்த மரத்தின் கீழே யிருக்கிறார்கள். அங்கே யிருந்து அவர் இவரைக் கண்டார். அப்பொழுது அவரோடு தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று ஆழ்வான்சேரி தம்பிராக்கள் கேட்டபோது தொடுவக்களத்தில்.......... மான் நம்பியார் சொன்னார். திருக்காரியூர் சபையிலேயிருந்து........................ பிராமணரை இரண்டுபேரை அனுப்பிவைத்து வந்தவருடனே போகிறேன் என்று சொன்னார். நாங்களும் அங்கேதானே போக வேண்டும், என்று எண்ணிக்கொண்டு புறப்படலாமென்று தம்பராக்கள் அவரோடு சொன்னார். அப்பொழுது உ[ண்]ணிக் குமரன் நம்பியாரும் உங்களை நாங்கள் அறியவில்லை யென்றும், எங்கிருந்து வருகிறீர்க ளென்றும் சொல்லவேண்டும் என்று கேட்டபோது, நாங்கள் திருநாவாயை ஆழ்வான்சேரியென்கிற வீட்டிலேயிருந்து வருகிறோம் என்று தம்பராக்கள் சொன்ன அருளைக் கேட்டு, தம்பராக்களென்று தெரிந்து மூன்றுபேரும் தம்பராக்களுடைய பாதாரவிந்தத்திலே வீழ்ந்து நமஸ்காரம் பண்ணினார்கள். வந்தணையுடனே தூரத்திலே நின்றுகொண்டு அடியேன்கள் அறியவில்லை யென்றும் சொன்னார். அதைக் கேட்டு மெத்த சந்தோஷத்தோடு தம்பராக்களானவர் இவரைப் பார்த்துச் சொன்னார்: நீங்கள் போகிற கார்யம் உங்களாலே சாத்யம் பண்ணிக்கொடுக்கிறேன் என்று சத்தியம் பண்ணினார் கள். அந்தக் காரணத்தாலே இப்பவும் குந்தனக்கோனதிரி யென்கிற கள்ளிக்கோட்டு ராஜாவானவர் தம்பராக்களைப் பார்த் ததேயானல் கைகூப்பவேண்டும். அங்கே யிருந்து எல்லோரும் ஒருமித்துக்கொண்டு போகிற சமயத்திலே (எ)[7] பசுக்கள் செத் துக் கிடக்கிறதைப் பார்த்தார். அவைகளுடைய சமீபத்திலே பதினறு கழுகுகள் இருக்கிறதைப் பார்த்து அவைகளோடே தம்பராக்கள் கேட்டார். ஏன் பக்ஷிகளே? நீங்கள் இந்த மாமிசத்

தைத் தீண்டாமலிருக்கிறீர்கள் என்று கேட்டபோது, அதில் ஒரு நொண்டிக் கழுகுஆனவன் சாவல் கழுகு பறந்து முன்னே விழுந்து இதை அறியவேணுமென்றால் இங்கேதானே சற்று நேரமிருந்தால் தெரியப்பண்ணுகிறேன்; என்று அந்தக் கழுகான பக்ஷி சொல்லி, இந்தப் பிணங்களை மூன்று பிரதக்ஷிணம் பண்ணி வடக்குப் பக்கத்திலேயிருந்து வலது கையிலே அசக்கி ஒரு இறகைக் கொத்தியெடுத்தான். அந்த இறகிலே இந்தப் பசுக்களுடைய சவங்களைப் பார்த்தபொழுது ஒன்று மாத்திரம் பசு ஜன்மம[ாக]வும், குறைய மற்றும் அநேக ஜன்மமாகவும் கண்டான். அந்தச் சவத்தைப் போய்க் கொத்தினான்; அதைப் பார்த்தபொழுது மற்றுமிருந்த கழுகுகள் எல்லாம் போய் கொத்திச் சாப்பிட்டு ஒவ்வொரு வழியே பறந்துபோகிற சமயத்திலே தம்பராக்களானவர் ஏன் பக்ஷிகளோ? மற்றும் கிடக்கிற சவங்களைத் தீண்டாமல் போகிறீர்களென்று கேட்டார்கள். அந்த நொண்டிக் கழுகானவன் அந்த இறகைத் தம்பராக்கள் கையிலே கொடுத்து இந்த இறகிலே பார்த்துப் பாரும் என்று சொன்னான். தம்பராக்கள் அந்த இறகை எடுத்துப் பார்த்தபோதும் மூன்பு கழுகு பார்த்தபோதும் கண்ட பிரகாரம் தானே கண்டார். இரண்டுபேர் ஏருடிமாரான மானீச்சனும், விக்கிரவனும், உ(ண்)ணிக்குமரன் நம்பியாரும் மனுஷ்யஜன்மம் என்றும் கண்டார். அந்த இறகை நம்பியாரானவருடைய கையிலே தம்பராக்கள் கொடுத்தார். பார்க்கவேண்டின உபதேசத்தையும் சொல்லிக்கொடுத்தார்கள். எல்லோரும் அந்தக் கழுகை வந்தனம் பண்ணினார்கள். பிற்பாடு தம்பராக்கள் கையினாலே அநுக்கிரகமும் வாங்கிக்கொண்டு மானீச்சன், விக்கிரவன் என்கிற இரண்டு ஏருடிமாரும், உண்ணிக்குமரன் நம்பியாரும் திருக்காரியூர் சபையிலே வந்து சபையை வந்தனம் பண்ணி எங்களை அழைப்பித்த காரியமென்னவென்று அறுபத்துநான்கு கிராமத்துப் பிராமணருடனேயும் சேரமான்பெருமாளுடனேயும் கேட்டார்கள். மலையாளராஜ்ய மடக்குகிறதற்காகக் கிருஷ்ணராயர் தண்டு எடுத்திருக்கிறார். அதற்காக, பதினேழு ராஜ்ஜியத்துப் பிரஜைகளை அழைப்பித்திருக்கிறேன். நீங்கள் முன் வந்து இந்த ஜனங்களாலே வெற்றிபண்ணி வரவேண்டும். அதற்காக உங்களை யனுப்பினேன் என்று சேரமான் பெருமாள் என்கிற ராசாவானவர் உத்தரவு பண்ணினார். அப்படித்தான் என்று சம்மதி பண்ணி, சபையை வந்தனம் பண்ணிக்

கொண்டு, அன்று ராத்திரியிலேயே பதினேழு ராஜ்யத்திலே யிருந்து வந்த பிரஜைகள் படுத்துத் தூங்குகிற சமயத்திலே அங்கே போய் அந்தப் பிரஜைகளை மூன்று பிரதக்ஷிணம் பண்ணி இறகை எடுத்துப் பார்த்தபோது, பதினேழு ராஜ்யம் பிரஜைகளிலே பதினாயிரம் ஜனங்கள் மனுஷ்ய ஜன்மம் பிறந்த வர்களும், முப்பதினாயிரம் ஜனங்கள் தெய்வஜன்மம் பிறந்தவர் களு மிருந்தார்கள். குறைய ஜனங்கள் எல்லாம் அசுபஜன்மம் என்றும் காணப்பட்டார். அந்தப் பதினாயிரம் ஜனங்களுக்கும் அடையாளமான குறிப்பைப் போட்டு, பொழுதுவிடியும் சமயத் தில் அந்தப் பதினாயிரம் ஜனங்களுக்கும் மானீச்சன், விக்கிர வன் என்கிற ஏருடிமார்களும் உண்ணிக்குமர நம்பியாரும்....... வலது பக்கத்திலே சண்டைக்கு எதிர்த்தார்கள். சேரமான் பெருமாளுடைய மந்திரிகள் பன்னி[ரெண்டு பேரி]லே வடமலை நாயர் என்கிறவர் தவிர, பதினொரு போர்களும் பதினாயிரம் ஜனங்களும் இடது பக்கத்திலேயும் சண்டைக்கு எதிர்த்தார்கள். சத்துருவினுடைய தண்டுகள் வலது பக் கத்திலே யிருந்து இடது பக்கமாய் ஓடி, மலையாளம் விட்டுப் பரதேசம் போனார். மலையாள தண்டுகளும், மானீச்சன், விக்கிரவன் என்ற யேருடிமாருக்கும் உண்ணிக்குமரன் நம்பி யாருக்கும், சேனைகளுக்கும் இறைமுகளும் கொடுத்துப் பரித்துத் தன்தன்னுடைய இடத்திற்கு அனுப்பிவைத்தார். அப்படி யிருக்கிற நாளையிலே ஸ்ரீ மகாதேவனுடைய புத்திரனை அதிக மகா தவமுள்ளவராய் சங்கராசார்யார் என்ற ஒருவர் பிறந்தார். அவர் பிறந்தது எந்தப் பிரகாரமென்றால்—ஒரு பிராமண ஸ்த்ரீயினுடைய வயிற்றில் ஜனித்தவர்தான் சங்கரா சாரியர். அவர் அனேக வித்யையுடனே இருந்தார். அப் பொழுது அவருக்குச் சரிசமமாய் இருக்கப்பட்ட பிராமணர் ஒருவருமில்லாமலாயிற்று. திருநாவாயை மாமாகவேலை என்கிற உத்ஸவம் ஆன மறுநாளைக்குப் பேராறு என்கிற ஆற்றின் மணல் புறத்திலே சங்கராசாரியார் அறுபத்துநாலு கிராமத் துப் பிராமணரையும் அழைப்பித்துக்கொண்டு அமரிக்கையும், ஆசாரமும், குல மரியாதையும், எச்சில் தீட்டுக்கம்ளு, ஸ்நாநமும், கிணற்றில் சுத்தியுடனே தண்ணீரெடுக்கவும்..................... பாத்திர சுத்தியுடனே சமைத்துச் சாப்பிடுவதற்கும் அதுஅது அவரவர்களுக்கு வேலைத்திட்டம் பண்ணி......................பேதங் களையும் உண்டுபண்ணினர். நாலு வர்ணத்தினலே பதினெட்டு

ஜாதிகளை யுண்டுபண்ணினர். அவைகளை (68) குலமென்றும் (72) குலமென்றும் சொல்லுகிறார்கள். அந்தக் குலங்களுடைய பெயர்கள் எது எதென்றால்—பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்ர இந்த நாலு சாதியிலேதானே அனேக பெயர்களிருக்கின்றன. பிராமணர்களிலே நம்பி, நம்பிடி, நம்பூரி, நம்பியாதிரி, இப்படி ஒவ்வொரு ராஜ்யங்களில் ஒவ்வொரு விதமாய்ப் பேர்களிருக்கின்றன. பின்னையும் பிராமணர்களில் சோமாதிரி, சுக்குதிரி, பட்டதிரி, பட்டன்மார் இதுவும் பிராமணர்கள். அகப்பதுவான்மார், புஷ்பவனமார், பிஷாரன்மார், இவர்களைப் பின்னம் சாதியிலே யிருந்து கெட்டுப்போனவர். க்ஷத்திரிய சாதியில் க்ஷத்திரியன், மோக்ஷகக்ஷத்திரிகன்; பூஷக்ஷத்திரிகன் சாமநதி.....................வைசிய சாதி மலையாளத்திலே இருக்கிறதென்றும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். சூத்திர சாதிகளை அனேகவிதம் சொல்லுகிறார்கள். அதில் வெள்ளாளருடைய பெயர்கள் எதெதென்றால்—தங்கள், கன்மள் [கைமல்] நாயகன், கடநாயகன், நம்பியார், அடியோடி, செல்லூட்டன்மார் என்று இப்படி ஒவ்வொரு பேருகள் சொல்லுகிறார்கள். இந்த சாதிக்குக் கீழ்சாதியா யிருக்கிறவரைச் சொல்லுகிறேன். அகத்து சார்ந்தவன், புறத்து சார்ந்தவன், அத்திகுற்சி, பறப்பூர், சார்ந்தவர் என்று இப்படி ஐந்து சாதிகள் இருக்கின்றன. இதற்கு சின்னசாதிகளுடைய பெயர்களைச் சொல்லுகிறேன். வெளுத்தே[ட]வெளக்கத்தறவன், குசவன், ஊராளி, வட்டேக்காட்டவன் என்றிப்படி ஐந்து சாதிகள் இருக்கின்றன. நான்கு வர்ணத்தினுடைய புறமேயிருக்கிற சாதிகளைச் சொல்லுகிறேன். சீனன், சிலம்பாண்டியன், குஞ்சிக்குத்திக்காரன், பரங்கிவந்த, பரிந்திருசு, இங்கிலிசு, பவுளாவன் என்று இப்படி யிருக்கப்பட்ட சாதிகள் இருக்கின்றது. சாலியர், வெள்ளாழச் செட்டி, சாக்கியர், யாவ....... கள் இவர்களெல்லாம் பதினெட்டு குலங்களுடனே சேர்ந்தவர்கள்தான். (ப)[வ]வுத்தர்களு மிருக்கிறார்கள். அவரை மிலேச்சன்மார் என்று சொல்லுகிறார்கள். அவர் அசுரவமிசத்திலிருந்து உண்டானவர். பின்பு தீட்டான ஜனங்களைச் சொல்லுகிறேன். ஈ(ழு)[ழு]வன், முக்குவன், குன்னுவாழிதான், மலையில்பணியன் இவர்கள். இவரை முன்னே பூர்வத்திலே சரீரத்தைத் தொட்டால் ஸ்னனம் பண்ணுகிற மரியாதை யிருந்தது. பிற்பாடு அவருக்கு நிலைமை யில்லாதபடியினலே

தீட்டு ஆகிவந்தது. வெளுத்தேடன் வெளக்கத்தறை இந்த சாதிகளைத் தொட்டால் ஸ்நாநம் பண்ணவேண்டும். அது அவருடைய வேலையின் தோஷத்தினாலே என்று சொல்லுகிறார். அம்பலவாசிகள் என்று சொல்லுகிறவர்கள் எல்லாரும் பிராமணரிலே யிருந்து பதி[த]த்வம் (வந்துவம்) வந்து கீழ்ப் பட்டும் சூத்திரசாதியிலே யிருந்து உயர்ந்திருக்கிறவர்கள்தான். அவைகளின் விவரம் என்னவென்றால் வாரியர், புறப்பொதுவாள், இவர்கள் சூத்திரசாதியிலேயிருந்து உயர்ந்தவர்கள். புஷ்பவனம்மார், பொதுவாள்மார், பிஷாரன்மார், இவர் பிராமணகுலத்திலேயிருந்து கீழ்ப்பட்டவர்கள். பின்னையும், உணித்திரிமார், திரிமூலப்பட்டன்மார், தீயாடி, தெய்யம்பாடி, சாக்கியார், என்றிப்படி சொல்லப்பட்டவர்களும் பிராமண குலத்திலேயிருந்து கீழப்பட்டவர்கள்தான். இனி, கம்மாளருடைய பெயர்களைச் சொல்லுகிறேன். வெல்லன், கணியன், மண்ணான், முன்னூரன், வேட்டுவர், கடவர், கரிம்பாலன், வள்ளுவன், புள்ளுவன், நாயாடி, குறவாளன், பணியன், புலையன், பாணன்,..........என்றிப்படி சொல்லப்பட்ட சாதிகள் தீட்டானவர். இப்படி எழுபத்திருகுலங்களுக்கும் ஆசார மரியாதைகளையும், நிலைமைகளையும், தீட்டும், புண்யாஹமும், இப்படிக்கு ஆசார மரியாதைகளை உண்டுபண்ணினார்; ஸ்ரீ மகாதேவனுடைய புத்திரனாயிருக்கிற சங்கராசாரியார். ஸ்ரீபரசுராமன் படைக்கப்பட்ட மலையாளம் நூற்றறுபதுகாதம் வழி ராச்சியத்தி லிருக்கப்பட்ட அறுபத்துநாலு கிராமத்துப் பிராமணராலே, திருநாவாயை, மணல்புறம், என்கிற ஆற்று மணலிலேயிருந்து மலையாளம் பதினேழு ராஜ்யமும், அடக்கி ஆளப்பட்ட ராஜாவையும்,.............ஜமீன்தாரா யிருக்கப்பட்ட நம்பி மாடெம்பிகளையும், ஸ்மார்த்தரையும் அழைப்பித்து உண்டு பண்ணின ஆசாரங்களையெல்லாம் எல்லாருக்கும் சம்மதி பண்ணிவைத்தார் சங்கராசாரியரானவர். ஸ்ரீசங்கராசாரியர் சகலகலா வல்லவராயிருக்கிற சமயத்திலே தன்னுடைய தாயார் இறந்துபோன சமயத்திலே பிராமணர் ஒருவரும் வராத படியினாலே தன்னுடைய வீட்டிலே ஹோமகுண்டம் உண்டு பண்ணி அந்தக் குண்டத்திலே தாயாரைத் தகனம் பண்ணினார் 'சங்கராசாரியார்'. அத்திக்குறிச்சி யென்கிற சாதிக்காரன் அப்பொழுது எலும்பு(ன)[ந]றுக்கிக் கொடுத்தான். ஆனபடியி

ஞலே அஸ்திகுறிச்சி என்று சொல்லப்படுகிருர். அதற்கு முன்னே எல்லோருக்கும் ஒரு சுடல்களமாயிருந்தது. சங்கரா சாரியர் தன் தாயாரை வீட்டிலே தகனம் பண்ணின பிற்பாடு அவரவருக்குத் தன்னுடைய வளவிலேதானே சுடல்கள மென்று சங்கராசாரியர் உத்தரவு பண்ணினர். அத்திகுறிச்சி என்கிற சாதிக்காரன் எலும்பு நறுக்கிக் கொடுத்தபடியினலே இப்பொழுதும் இறந்துபோனல் அத்திகுறிச்சி என்கிறவனைக் கூ[ட்]டாதே ஒருவனுக்கும் கர்மாந்தரமில்லை. பிராமண னில்லாமல் சூத்திரனுக்கும் சூத்திரனில்லாமல் பிராமணனுக்கும் கர்மங்களில்லை. அண்டைக்கு சுடுகாடுகளும் தன்தன்னுடைய வளவிலே என்று திட்டம் பண்ணினர். பின்னையும் பிராமண ரும், க்ஷத்திரியரும் சூத்திரன் வீட்டிலே சம்சர்க்கம் பண்ணலாம் என்றும் திட்டம் பண்ணினர். அதற்கு முன்னே அந்தந்த சாதிக்குத் தன்னுடைய சாதியிலே கல்யாணம் பண்ணுகிற தல்லாமல் சூத்திரர் வீடுகளிலே பிராமண க்ஷத்திரிய பெண்களை வைத்துக்கொண்டிருக்கிற மரியாதை உண்டாயிருந்ததுமில்லை. அதுவுமல்லாமல் மலையாளத்தில் அனேக மரியாதைகளையும் உண்டாக்கினர் சங்கராசாரியார்.

ஈச்சுவரனுக்கு ஒருவனும் பேதகமில்லை. ஒரு சாதி களுக்கும் பரதேசங்களிலே தீட்டு யில்லை. எல்லா சாதிகளும் ஒரு இடத்திலே யிருப்பார்கள். பரராச்சியங்கள் ஞானபூமி யானபடியினலேயும் மலையாளம் கர்மபூமியானபடியினலேயும் மலையாளத்திலே கர்மத்துக்கு விகாதம் வரலாகாது என்று எண்ணிக்கொண்டு இந்த விதங்களெல்லாம் உண்டுபண்ணினர் சங்கராசாரியர். அந்த மரியாதைகளைத் தப்பி நடக்கிறவர் களுக்கு தாரித்திரியமும் துக்கமும் மகாவியாதியும் பிரமேகம், அம்மை—கண்டமாலை, புட்டை, ஆனைக்கால், மகோதரம், பேதி, சயம், பகந்தரம், ராசப்பிளவை யிப்படிப்பட்ட மகாவியாதிகளும் வருமென்றும், ஆனபடியினலே மரியாதை களைத் தப்பி நடக்கலாகாது என்றும், அறுபத்துநாலு கிரா மத்து பிராமணருடனேயும் ராசாவுடனேயும் சமீன்தாருட னேயும், மற்றும் பல திவ்விய சனங்களுடனேயும், லோகரு ருடனேயும் சகல சனங்களும் கூடியிருக்கிற சபையிலே யிருந்து சங்கராசாரியர் சொல்லித் திட்டம் பண்ணினர்.

சேரமான்பெருமாள் என்கிற ராசாவானவர் சங்கராசாரியி னுடைய திட்டத்துக்குத் தப்பு வராதபடிக்கு, மலையாளம் நூற்று அறுபது காதம்வழி ராச்சியம் ஆண்டு பரிபாலனம் பண்ணிக் கொண்டு வருகிற நாளில், சேரமான்பெருமாள் என்கிற ராசாவும் தனக்கு மோட்சத்தை அடையவேணுமென்று எண்ணிக் கொண்டு, கற்கடக வியாழம் பங்குனி மாதத்திலே திருநாவாயை மாமாக வேலை யென்கிற உற்சவத்துக்கு சேரமான்பெருமாள் என்கிற ராசாவும் பிராமணரும் பிரசைகளும் தீர்த்த ஸ்நானம் பண்ணிக்கொண்டு யோசனை பண்ணினது என்னவென்றால், கன்னியாகுமரி முதல் கோகரணம்வரைக்கும் பரசுராமன் படைத்த பூமி மலையாள ராச்சியத்துக்கு எல்லை. வடக்கே கன்னேற்றிப் புதுப்பட்டணம். தெற்கே சங்கலபுரத்த[க]ழி. மேற்கே புதுப்பட்டணத்து அ[க]ழி. (மேற்கே) கிழக்கே கண்வாயை. இந்த எல்லைகளுக்குள்ளே பதினெட்டு அழிமுகம் பதினெட்டு கணவாயை வாசலும், தொண்ணூற்றுஆறு நகரமும், நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு ஈசுரன் கோவில்களும், நூற்றெட்டு துற்காலயமும் ஆயிரத்தெட்டு, ஆயுதசாலை நாற்பத் தீரடியும், அறுபத்துநாலு கிராமங்களும், இப்படி இருக்கப்பட்ட சேரமான் ராச்சியத்தை தனக்கு மோட்சம் அடைய வேணு மென்று எண்ணி அநேக சனங்களுக்குப் பங்கிட்டுக்கொடுத் தான். காரணம் இந்தப்பிரகாரம் என்றும், மூலம் இந்தப்படி என்றும், ஆதி அந்தம் இந்தப்படி என்றும், நல்லது இந்தப்படி என்றும், கெட்டது இந்தப்படி என்றும், குணம் இந்தப்படி என்றும், தோஷம் இந்தப்படி என்றும் மலையாளத்திலே இருக் கப்பட்ட சனங்களுக்கு அறிகிறதற்காக நாலு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும் கிரகித்தார்கள். பின்னையும் பின்னையும் ரேகை, காட்சி, அனுபோகம் என்று இப்படிச் சொல்லப்பட்ட கரணசென்மம்—(கரண மென்றால் ஒருவனுடைய பூமிக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து ஒத்தியாக வாங்குகிறது ; சென்மம் கிரையத்துக்கு வாங்குகிறது). இவைகளினுடைய மரியாதை களையும், வியாபார மரியாதைகளையும், கப்பல் வியாபார மரியாதை களையும், மாட்டு வியாபார மரியாதைகளையும் சேரமான் பெருமாள் என்கிற ராசாவும் அறுபத்து நாலு கிராமத்து பிராமணரும் கூடித் திட்டம் பண்ணினர். இந்தத் திட்டத்திற்குப் பெரியதாய் மற்றொரு மரியாதை யில்லை யென்றும் உத்தரவு பண்ணினர்கள்.

பிற்பாடு சேரமான் பெருமாள் என்கிற ராசா, சுவர்க்கத் துக்குப் போகவேணும் என்று எண்ணிக்கொண்டு, வடக்கு கோலத்திரிட ராசாவுக்கு மூன்றுலட்சத்து எண்பத்திரண்டா யிரம் நாயரையும் வளபுரத்துக் கோட்டையிலே யிருந்து சுரிக் கேட்டி சேவிக்க என்கிற ஆயுதம் எடுத்து சேவகம் பண்ணுகிற தற்கும் ராசரீகம் ராசாங்க மரியாதைகளேயும் கொடுத்தார். வேணுட்டு அடிகள் என்கிற நஞ்சனுட்டு ராசாவுக்கு ஓமனப் புதியவிட மென்கிற கோட்டை அரண்மனைக்கு வலது பக்கத்தில் ஆயுதம் எடுத்து சேவகம் பண்ணுகிறதற்காக, மூன்று லட்சத்து எண்பத்திரண்டாயிரம் சனங்களேயும், ஆயுதம் எடுத்து சேவகம் பண்ணுகிறதற்கும் ராசரீக ராசாங்க மரியாதைகளேயும் கொடுத் தார்கள். பிற்பாடு பெரும்படுப்பு ராசா(வு) என்கிற கொச்சி ராசாவுக்குப் பதினெட்டுக்காதம் வழி ராச்சியம் ஐம்பத்திரண் டாயிரம் நாயரையும், ஆயுதம் எடுத்து சேவகம் பண்ணுகிறதற்கு ராசரீக ராசாங்க மரியாதைகளேயும் கொடுத்தார்கள். இப்படியே பதினேழுராச்சியமும் பதினெட்டு ராசாக்களுக்குக் கொடுத்தார் கள். அயிரூர் சாற்கா; பறப்பூர்; படிஞ்ஞாற்றெடம்; மாடத் தின் கீழ்; இப்படி நாலு வழி க்ஷத்திரியர் எட்டுவழி சாமந்தர் ஆறுவழி வெள்ளாளர் என்று இப்படி பதினெட்டு ராசாக் களுக்கு ராச்சியங்களேப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். பதினெட்டு ஆசார நீதிகளேயும் உத்தரவு பண்ணினுர்கள். அவைகளி னுடைய பேர்கள் ஏதேதென்றால்-காலும் தோலும் க(ணெ)[ணே] யும், கரிபடவும், அங்கவும், சுங்கவும், ஏழையும் கோழையும், பறக்கும், கூத்து, முன்பிலதளி, சிறிதுவிளி, ஆனேயும், வாளும், வீரசங்கிலியும், விருதும், வாத்தியமும், நேமவெடி, நெற்றிப்பட்டம், படவிட் இப்படி பதினெட்டு ஆசார நீதிகள். பங்கியூர், சோவுரம் என்று இப்படி பிராமணரிலே இரண்டு பட்சமாயிருக்கிறுர்கள். பாட்ட, பிரபாகர, வியாகரணம் மூன்று விதத்திலே ஆறு சபைகளேயும் இந்த ராசாக்களுக்குக் கொடுத்தார்கள். ஓரோர் ராச்சியங்களிலே ஓரோர் ராசா வுக்குப் பட்டங்கட்டினுர். சேரமான் பெருமாள் என்கிற ராசா வும் தன்னுடைய ராச்சியத்தைத் தனக்கு வேண்டப்பட்ட சனங்களுக்குப் பங்கு போட்டுக் கொடுத்து சுவர்க்கத்துக்குப் போகிறுர்களென்று புன்துறையிலே யிருக்கிற மானிச்சன், விக்கிரவன் என்கிற இரண்டு ஏறாடிமார்களும், தொடுவக் களத்தில் உணிக்குமரன் நம்பியாரும் அறிந்து புறப்பட்டு,

திறக்காரியூரில் வந்தபோது, சேரமான் பெருமாள் என்கிற ராசாவும் அறுபத்துநாலு கிராமத்து பிராமணரும் நெடியிருப்பு ராச்சியத்திலே சித்திரகூடத்திலே யிருக்கிறாரென்று சேதி கேள்விப்பட்டார்கள். அங்கே போய், சேரமான் பெருமாள் என்கிற ராசாவைக் கண்டார். அப்போது சேரமான் பெருமாள் என்கிற ராசா சொன்னார்: பதினேழு ராச்சியமும் பதினெட்டு ராசாக்களுக்கு பங்கு போட்டுக் கொடுத்து விட்டேன் என்றும், நீங்கள் வரவும் இல்லை; உங்களுக்கு ராச்சியம் கொடுத்ததுமில்லை என்றும் சேரமான் பெருமாள் சொன்னதைக் கேட்டு, எங்களுக்கு ராசா அவர்களுடைய தயவினாலே கொடுக்கிறது போதுமென்று உணிக்குமரன் நம்பியார் சொன்னார். கன்னியாகுமரி முதல் கோகர்ணம்வரைக்கும், கன்னெற்றி புதுப்பட்டணம் வரைக்கும் என்னுடைய ராச்சியம்தான். அதையெல்லாம் ஆண்டு பரிபாலனம் பண்ணுங்கோள் என்று சுவர்ணதீபம் வைத்து, சுவர்ண சங்கத்திலே நீரும், ஆனைக் கோலுக்கு மூன்று கோல்வழி ராச்சியமும், கொக்கொழிக் கோட் சுள்ளிக் காடும், பள்ளிமாருடியும், கத்தியும், நீரும் கொடுத்தார் சேரமான் பெருமாள் என்கிற ராசா. அவர்கள் பின்னையும் இறந்து போயும் கொண்ணும்? ராச்சியம் அடக்கி வாழுங்கோள் என்று சொன்னார். அந்த நீரைகுக நிரம்ப வாங்கினார், மானிச்சன், விக்கிரவன் ராசா அவர்கள். நிரம்பி வழிந்த நீரைக் கையிலே வாங்கி முன்னே குடித்தான் தொடுவக்களத்திலே உணிக்குமரன் நம்பியார். அப்போ உணிக்குமரன் நம்பியாருக்கு, "மங்காட்டு ராச்ச மேனவன்" என்று சேரமான் பெருமாள் பேர் கொடுத்தார். பின்னையு மானிச்சன் குன்னனக் கோனதிரி ராசா(வு) என்றும், விக்கிரவனுக்கு, இளங்கூறு நம்பியாதிரி திருமூலப்பாடு என்றும் பேர் கொடுத்தார்.

பின்னையும், பரமதாளி பள்ளிமாருடி வெள்ளிக்காளம் விளிப்பிக்க-என்ன வென்றால் வெள்ளிக் குழல் ஊதுவிக்கிறது. ஆலவட்டம், வெண்சாமரம் மக்கத்திலே மாமாக வேலை ரட்சிக்கிறது. பதினேழு ராச்சியமும், பதினெட்டுக் கோட்டை வாசல் களும் ராச்சிய பாலனம், ராச்சியாதிகாரம், காலும் தோலும் கணையும், கரிம்படம், அங்கம், சுங்கும், ஏழை, கோழை, ஆனை, வாள், விருது, வீரசங்கோலை, விருது, வாத்தியம், நேமவெடி, நெற்றிப்பட்டம், ப(ை)டவீடு, பறக்கும், கூத்து, முன்பிலத்தளி,

சிறிதுவிளி என்று இப்படிப் பதினெட்டு விருதுகளையும், பாட்டப் பிரபாகர வியாகரணம் படித்த பிராமணர் மூன்றுவிதக்காரர் அதிலே விருத்தியாய் மூன்று விதத்திலே பதினெட்டு சங்கயி பதினெட்டு சங்கமாய் இருக்கிறது. 18 சங்கத்தையும் குன்னக் கோனதிரி ராசாவுக்குக் கொடுத்தார். அதுவுமல்லாமல் திருடரையும் துஷ்டாளையும் சங்காரம் பண்ணி, பசுவையும் பிராமணரையும் பலிபாலனம் பண்ணி, தொழுவும் சூலமும் உண்டு பண்ணி வைத்து, அறையும் துறையும் உண்டுபண்ணி, தரையும்-சங்கேதம் அறுபத்துநாலு கிராமத்துப் பிராமணருக்கும் ஆனந்தத்தை விருத்திப்பித்து அவருடைய அனுக்கிரகத்தினலே ஆழி சூழ மூழியிலே கன்னியாகுமரி முதல் கோகர்ணம் வரைக்கும் ஏக சக்கிராதிபதியாய் ஆண்டு, ராச்சிய பரிபாலனம் பண்ணுகிறதற்கு ஆக்கினையும் அனுக்கினையும் வம்சிச பாரம்பரியமாய் நடகசும். நடக்கிறதற்கு மானிச்சனுக்கும் விக்கிரவனுக்கும் கத்தியும் நீரும் கொடுத்தார் சேரமான் பெருமாள். வள்ளுவக் கோனதிரி ராசாவுக்கு டால் கொடுத்தார். பின்னையும் அந்த ராசாவுடனே எப்படியாகிலும் தட்டித்தடுத்து நில்லுங்கோ என்றும் சேரமான் பெருமாள் சொன்னர். இப்படியெல்லாம் உத்தரவு பண்ணி, சேரமான் பெருமாள் என்கிற ராசா அவர்கள் சுவர்க்கத்துக்குப் போகிறதற்காக கொடுங்கல்லூர்க் கோவிலுக்குள்ளே எழுந்தருளினர். அன்றைக்குக் கலி வருஷம்..... ?

பிற்பாடு, குந்நனக் கோனதிரி ராசா என்கிற கள்ளிக் கோட்டு ராசா அவர்கள், போல நாடு ராச்சியத்தையும், லோகர் என்கிற குடிகளையும் தன்வசம் பண்ணிக்கொள்ள வேணுமென்று எண்ணிக்கொண்டு, சவரக் கூற்றில் ஐயாயிரம் சனங்களுக்குப் பிரபுவாயிருக்கிற வேட்டத்துக் கோவில் பாடுக்கும், புதுக்கோட்டுக் கூற்றில் மூவாயிரம் நாயருக்கும் திருமலச் சேரி நம்பூதிரிப்பாடுக்கும் எழுதியனுப்பி, அவரை அழைப்பித்துக் கொண்டு நீங்கள் நமக்கு பந்துக்களாயிருக்க வேணுமென்று பந்நியங்கரையிலேயிருந்து கைபிடித்துச் சத்தியம் பண்ணினர். பிற்பாடு, வேட்டத்துக் கோவில்பாடு என்கிறவருடைய ஐயாயிரம் சனங்களும் சேனபதிகளும் குந்நனக் கோனதிரி ராசாவும் அவருடைய ஆக்கினைக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

பிற்பாடு, திருமலச்சேரி நம்பூதிரிப்பாடு என்கிறவருடைய சனங்கள் மூவாயிரமும், சேனபதிகளும், இளங்கூறு நம்பி

யாதிரி, திருமூலப்பாடு என்கிற கள்ளிக்கோட்டு இளைய ராசா(வு) அவர்களுடைய ஆக்கினைக்குக் கீழ்ப்படிந்தார்கள். இந்தச் சேனைகளை எல்லாம் சேர்த்துக் கொண்டு குந்நனக் கோனாதிரி ராசா அவர்களும் இளங்கூறு நம்பியாதிரி திருமூலப்பாடு என்கிற இளையராசா அவர்களும் பந்நியங்கரையிலே இருந்தார்கள்.

பிற்பாடு, நாலு பன்னீராண்டு வருஷம் குந்நனக் கோனாதிரி ராசா போறளாதிரி ராசாவுடனே சண்டை பண்ணினார்கள். போலநாட்டு ஆக, பதினாயிரம் சனங்களிலே போறளாதிரி ராசா அவர்களுக்கு மூன்று காதம் வழி ராச்சியமும், அதற்குள்ள எழுபத்திரு ஊர்களும், மூன்று கூட்டம் என்கிற மூன்று விதக்காரரும், ஐந்து, அகம்பிடி என்கிற சனங்களும் இருக்கிறார்கள். குந்நனக் கோனாதிரி ராசா அவர்கள் போறளாதிரி ராசாவோடு நாலுபன்னிரண்டு வருஷம் சண்டைபண்ணியும் அவரைச் செயம் பண்ணக் கூடாமல் போச்சுது. அப்போது குந்நனக் கோனாதிரி ராசா அவர்களுடைய காரியக்காரன்மார் நாலு பேரும் கூடிப் போறளாதி ராசா வைத்துக் கொண்டிருக்கிற நாலகத்து அம்மையைக் கண்டார். இந்தக் கோட்டை பிடிக்கிறதற்கு நீங்கள் ஒரு உபாயம் பண்ணிக் கொடுக்கவேணும் என்றும், நாலு, ஆனையும், நாற்பதினாயிரம் பணமும் கொடுக்கிறோம் என்றும் நாலு மந்திரிகளும் நால்அகத்து அம்மையுடனே சத்தியம் பண்ணிக் கொடுத்தார்கள்.

பிற்பாடு, போறளாதிரி ராசா(வு) அவர்கள் தலையிலே எண்ணெய் தேய்த்துக் கொண்டு குளத்துக்குப் போன சமயத்திலே, நாலகத்து அம்மை கோட்டையினுடைய கதவைத் திறந்து கொடுத்தாள். அப்போது கோட்டைக்குள்ளே புகுந்து மூன்று வெடி சுட்டார். குந்நனக் கோனாதிரி ராசாவும், மந்திரிகளும், சனங்களும், போறளாதிரி ராசா, ஐயோ! சதிபண்ணினாளோ என்று சொல்லிக் கொண்டு ஸ்நானம் பண்ணாதபடிக்குக் கோலாடிக் காவல் என்கிற இடத்திற்குப் போனார். அங்கேயிருந்து ஸ்நானம் பண்ணினார். பிற்பாடு கீழல்லூராரையும் குருவட்டூராரைரும் அழைப்பித்து, நீங்கள் எனக்கு சகாயமாயிருக்க வேணுமென்றும், பொல்லூரும் செருவட்டூரும் நாலகத்து அம்மையினுடைய வீடு ஆனபடியினாலே, ஆண்பிள்ளை பிறக்காமல் இருக்கட்டும். பிறந்தால் சவுகரியமில்லாமலிருக்கட்டும் என்றும் போறளாதிரி ராசா சொன்னார். நீங்கள்

இரண்டு ஊராருக்கும் ஸ்நானமும் வாத்தியமும் முதன்மையும் கை[கய்]யும் இருக்கட்டும் என்றும் சொன்னார்.

போறளாத்திரி ராசா அவர்கள் துறச்சேரி ஆறுதாண்டிப் போனார். கோழிக்கோட்டு வளப்புரத்துக் கோட்டையும் உண்டு பண்ணி, அன்னிய ராச்சியத்துக்காரனுயிருக்கிற தொப்பிக் காரன் அறயில்குறியன் என்கிற கப்பித்தான், ராசபட்டத் துடனே, ஆலவட்டம், வெண்சாமரையும் வீசுவித்துக் கொண்டு, அறை என்கிற வீடுகளையும், துறை என்கிற சமுத்திரவீதிகளை யும், தளி யென்கிற தளியில் கோவிலையும், சங்கேதம் என்கிற சங்கேத தேசங்களையும் உபத்திரவம் பண்ணி, இராச்சியம் பட்டணம் இதுகளையும் அடக்கிப், பசுவையும் பிராமணரையும் உபத்திரவம் பண்ணிக்கொண்டு இருந்தான். குந்நனக் கோனுதிரிராசா அநேகம் நாள் சண்டை பண்ணி அவனையும் செயம் பண்ணினார்.

பிற்பாடு, கள்ளிக்கோட்டு ராசா என்கிற குந்நனக் கோனுதிரி ராசா அவர்கள், போறளாதிரி ராசாவையும் அற யில் குறியனையும் செயம் பண்ணி, அறையும் துறையும் அடக்கி, தளியும் சங்கேதமும் பசுவையும் பிராமணரையும் பரிபாலனம் பண்ணி, அறுபத்துநாலு கிராமத்துப் பிராமணரையும் ஆனந் தம் பண்ணி வைத்து, அவருடைய அனுக்கிரகத்தினாலே வந்த சனங்களுக்கு செலவுக்கும் கொடுத்து, இருந்த சகல கணக்கு களும் மாங்காட்டச்சன் கணக்கில் எழுதியிருந்தார். பதினுயி ரம் சனம் என்றும், முப்பதினுயிரம் என்றும், இப்படி நாற்பதி னுயிரம் சனங்களும் அதற்குள்ளே அகத்து வீட்டுப் பரீக்ஷை யென்கிறதும், பய்யனாட்டு லோகரு என்றும் இப்படி சிறப் பாகச் சனங்களுடனே இருந்தார். என்ன காரியமிருந்தாலும் மாங்காட்டு அச்சன் ராசாவோடே சொல்ல வேண்டினது. அப்படி மரியாதை நடந்தது. மாமாக வேலை ரட்சிக்கவும், மக்கத்திலே கப்பல் வைப்பிக்கிறதும், கோலக்குன்னத்து சிவாங்கள் என்கிற பிராமணனுடைய உத்தரவுடனே, தளியில் கோவிலிலே தானதர்மங்களையும் பண்ணி, நியாயமும் சத்திய மும் நடப்பித்து, பதினேழு ராச்சியமும் பதினெட்டு கோட்டைப் படியும் பரிபாலனம் பண்ணிக்கொண்டு இருந்தார் நெடியிருப்பு ராச்சியத்துக்குக் குந்நனக் கோனுதிரி ராசா.

மேற்படி ராசாவானவர், வேணாட்டு அடிகளும் கோலத்திரி ராசாவும் இவர்கள் இரண்டு பேர்களுமே தவிர, மற்ற ராசாக்களுடனே, ஐப்பசி மாதம் பத்தாம் தேதி முதல் வைகாசி மாதம் பதினைந்தாம் தேதி வரைக்கும் வெயில் காலங்களிலே சண்டைக்கு எதிர்ப்பார்கள். வைகாசி மாதம் பதினைந்தாம் தேதி முதல் அற்பசி மாதம் பத்தாம் தேதி வரைக்கும் மழைக்காலமானபடியினாலே சும்மாயிருப்பார். வருஷகாலமானவுடனே, போலநாடு ராச்சியத்துப் பதினாயிரம் சனங்க(ளு)[ளையு]ம் ஒன்புலாவின் கீழே சேர்ந்து ஆலோசனை பண்ணி நிச்சயித்துக்கொண்டு சண்டைக்கு ஆரம்பிப்பார். சண்டைக்காகப் புறப்படுகிற சமயத்திலே சத்துருக்களாயிருக்கிற சோவுரக்கூற்றுக்காரருக்கு எழுதியனுப்புவார். படைத்தலைவராயிருக்கிற மங்காட்டு அச்சனுக்கும் தெனயஞ்சேரி இளையதுக்கும் ச(தியி)[த்தியமி]ல்லை. சத்தியத்தினாலே செயம் பண்ணி வர்த்தித்தார் நெடியிருப்பு ராசா. கேரளத்திலே பதினேழு ராச்சியமும் பதினெட்டு ராசாக்களுமாயிருக்கின்றன. அவருடைய ராசதானிகள், இடம், மடம், கோவிலகம், கே(ா)ட்டை, கொட்டாரம் இப்படி அந்த அந்த ராசாக்களுடைய அரண்மனைக்கு அநேகம் பேர் சொல்லுவார்கள். கன்னியாகுமரி முதல் கோகர்ணம் வரைக்கும் நூற்றறுபது காதம் வழி, சேரமான்பெருமாளுடைய ராச்சியமாயிருந்தது. இதுவல்லாமல், வேறே பதினேழு ராச்சியம் என்றும், கேரளமும் கொங்கணமுமல்லாமல் ஐம்பத்தாறு ராச்சியம் என்றும் சொல்லுகிறார். கேரளத்தினுடைய சமீபம் ஐந்து ராச்சியம் உண்டு என்று சொல்லுகிறார். அதனுடைய பேர்கள், பாண்டிநாடு, கொங்க நாடு, துளுவ நாடு, வய நாடு, புனனாடு. இவைகள் கேரளத்துக்குச் சமீபம் என்றும் சொல்லுகிறார்கள். தெற்கே வேணாட்டு ராச்சியமும், வடக்கே கொல்லத்து நாடும் பிரதானமான ராச்சியம் என்றும், அல்லது போலநாடு பிரதான ராச்சியம் என்றும் சொல்லுகிறார்கள்.

போல நாட்டிலே நடக்கப்பட்ட மரியாதைகள் எல்லா ராச்சியங்களிலேயும் நடக்கும். கோழிக்கோட்டிலே நடத்தப்பட்ட நியாயங்களும் ஒற்றிவாங்குகிறதினுடையவும் கிரையத்துக்கு வாங்குகிறதினுடையவும் பூமிகளினுடைய நியதிகளும், கொடுக்கல் வாங்கல்களுடைய மரியாதைகளும், கடன் பிரிக்கு ...யா... மரியாதைகளும், சனங்களுக்கு அரிசி கொடுக்கிற மரியாதை

களும் நடத்துகிறபடிக்கு மற்றொரு ராச்சியத்திலேயும் அந்தத் திட்டம் வராது.

வியாச்சியம் வியவகாரங்களுக்கு சனங்கள் கூடவேண்டின இடம்; மடம், வாதில், மாடம், கோவிலகம், கோவில், கொட்டாரம், கோட்டில், இடக்கோட்டில், அத்தக்கோட்டில், புறக்கோட்டில், படக்கோட்டில், வீதிக்கோட்டில் என்று இப்படிச் சொல்லப்பட்ட இடங்கள் எல்லாம் பெரிய கூட்டங்களுக்குக் கொடுக்கிற இடம். அதுக்கு நெடும் கூட்டம் என்றும் மலையாளப்பேர்.

சின்ன வியவகாரங்களுக்கு (நிழல் கூட்டம்) கூட்டம் இருக்கவேண்டின இடம்: பறம்பு, மைதானம், பாழுபறம்பு, கரம்பு, வீட்டுப்படிக்(கு)[கட்டு], வீட்டுவாசல், கோட்டைப்படி, கோட்டைவாசல், சங்காதி வீண்டிடம், சிநேகிதன் இருந்தவிடம், வீரியம் வீணிடம், மிருகம் அகப்பட்ட இடம், மாடி விளிச்சிடம், சத்துருக்கள் சண்டைக்கு அழைத்த இடம், தேடி விழித்திடம், சத்துருக்கள் சண்டைக்குத் தேடி நடந்த இடம், ஊர்ப்பள்ளி இடம், மடைப்பள்ளி, வேலைக்கழகம், உற்சவம் பண்ணுகிற இடம், மாமாகக் கடவு, மாமாக உற்சவம் பண்ணுகிற இடம், ஒலெரிப்பட களி என்றிப்படிச் சொல்லப்பட்ட இடங்களிலே யெல்லாம் இந்த லோகர் என்கிற சனங்கள் கூடவேண்டின இடம். கூட்டம் இருக்கிறதினுடைய பேர்கள்: படைக் கூட்டம்—சண்டைக் காரியத்துக்காக ஆலோசனை பண்ணுகிறது. நடுக்கூட்டம்—நன்மை தின்மைகளுக்கு ஆலோசனை. நாயாட்டுக் கூட்டம்—வேட்டைக்காக ஆலோசனைபண்ணுகிறது. யோக்கியக் கூட்டம்—நஷ்ட ஆதாயங்களுடைய ஆலோசனை. சங்காதம்; மற்றொரு ராசாவுக்குப் பலமில்லாமல் போனால் அந்த ராச்சியம் சத்துருக்கள் கொண்டு போகாமல் இருக்கும்படிக்கு ஒத்தாசை ராசாக்கள் பண்ணுகிறது. கடக்காரியம்; இவை இரண்டும் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருதரம் தீர்ப்பு ஆகின்றன.

அப்படித் தீர்ப்புப் பண்ணுகிறதற்குக் காரணம் என்னவென்றால், பூர்வத்தில் சேரமான்பெருமாள், கேரள ராச்சியம் ஆளுகிறதற்கு முன்னே ராச்சியம் ஆண்ட ராசாக்கள் பன்னிரண்டு வருஷம் ஆண்டால், பிற்பாடு வேறேயொரு ராசா வருவார். இப்படி நடந்து வந்தது.

வியாழப் பட்டம் பன்னிரண்டு வருஷமானால் அந்தக் கணக்கு எல்லாருக்கும் தெரியாது. அப்போது வருஷமில்லை. கலிமாத்திரம் இருந்தது. அந்தக் கலியுடைய கணக்கும் எல்லாருக்கும் தெரியாது.

அந்த நாளையிலே, கேரளத்திலே இருக்கப்பட்ட ராசாக்களும் அறுபத்துநாலு கிராமத்துப் பிராமணரும் கொல்லத்து வியாபாரி என்கிறவனும் கூடியிருக்கிறபோது, கொல்லத்து வியாபாரி கொல்லத்திலே ஒரு குளம் சிற..........குழிப்பித்தார். அந்தச் சிறையிலே தண்ணீர் வரவில்லை. அப்போது கொல்லத்து வியாபாரி பிராமணருடனே கேட்டான். அப்போது பிராமணர் கொல்லத்து வியாபாரியுடனே சொன்னார்; நீ உன்னுடைய சம்சாரங்களுக்குச் செலவுக்குக் கொடுக்கிறதில்லையா வென்று கேட்ட போது, நான் என்னுடைய குடும்பம் சம்சாரங்களுக்குச் செலவுக்குக் கொடுத்து வந்ததில்லையென்று சொல்லி, அந்தக் [கொல்லத்து வியாபாரி] உடனே போய்ச் சம்சாரங்களுக்குச் செலவுக்குக் கொடுக்கும்படிக்குத் திட்டம் பண்ணினான். அந்தக் கொல்லத்து வியாபாரி, பின்னையும் குடும்பம் சம்சாரங்களுக்குச் செலவுக்குக் கொடாமல் இருந்த பாவம் போகிறதற்குத் தான [தர்மமுஞ்] சகஸ்திர போசனம் மகாமிர்த்தியம் செபம் என்றிப்படிச் சொல்லப்பட்ட சத்கர்மங்களையும் பண்ணிவைத்து பிராமணசனங்களுக்குத் தானதர்மங்களையும் பண்ணினான். அந்தப் பிராமணருக்கெல்லாம் அந்த தேசற்....குளத்திலே இலைகளைப் போட்டு, பிராமண போசனத்தைப் பண்ணிவைத்தான். பிராமணர் எல்லாம் போசனம் பண்ணி, திருப்தியடைந்தவுடனே சிறையில் குளத்திலே தண்ணீர் வந்து நிரம்பிப் போயிற்று. பிராமணர்கள் சாப்பிட்டு எழுந்திருக்கிறதற்கு முன்னே தண்ணீர் வந்து நிரம்பி வழிந்துபோனபடியினாலே அன்றைக்கு எச்சிலிலைகளை எடுக்கவில்லை. தண்ணீர் நிரம்பி வழிகிறபோது கொண்டுபோய்விட்டது. அப்போது கொல்லத்திலே கோவில் பணணி வைத்தார்.

அந்தி நாள் [முதல்] கொண்டு மலையாள வருஷம்-1-என்று கணக்கு உண்டு பண்ணினார். வருஷக் கணக்கு அதுக்குப் பிற்பாடு அல்லாமல் முன்னேயில்லை. கொல்லம் வருஷக் கணக்கு இல்லாமல் போனால் கணக்கு எல்லாருக்கும் தெரியாது

என்று எண்ணிக் கொண்டு கொல்லமும் வியாழமும் கலியும் மூன்றும் கணக்கு வைத்துக் கொண்டு வந்தார்.

சேரமான் நாடு நூற்று அறுபதின் காதம் வழி ராச்சியத்திலேயும் ஒரு மரியாதை அல்ல; அந்த ராச்சியங்களிலே அங்கே அங்கே வேறே வேறே மரியாதைகள் நடக்கின்றன. குடியானவன் நடக்க வேண்டியதைத் தடங்கல் பண்ணினாலும் தடங்கல் பண்ண வேண்டினதை நடப்பித்தாலும் அவன் குற்றக்காரன். ஆனால் அவனுடைய ஆதாரங்கள் பிடுங்க வேணுமானால் முன்னே அனுபோகத்துக்குக் கொடுத்திருந்தால் அ(த்)தைத் திருப்பி வாங்காதபடிக்கு அவனை ஒன்றும் செய்யப்படாது. திறந்து கொடாதபடிக்கு பலத்தினாலே வீட்டுக்குள்ளே புகுந்து இருக்கப்படாது. திறந்துகொடுத்தால் இருக்கலாம்.

பூமியிலே பலங்கள் வைக்க வேண்டின விவரம்:—நல்ல பூமியிலே ஆறு நூறு, ஆயிரம் என்று சேர்த்துப் பேர்கள் பத்து நூறு ஆயிரம் என்றும் சொல்லுகிறார். அதனுடைய வயணம் என்னவென்றால், ஒரு பூமியிலே பத்துப்பலாமரம், நூறுதென்னை மரம், ஆயிரம் பாக்கு மரம் இப்படிச் சொல்லுகிறார். பிற்பாடு வெத்திலைக்கொடி, மிளகு, கத்தரிக்காய்ச்செடி, மூங்கில், இவைகள் பயிர் போட வேண்டியது. பலன்களிலே ஐந்துவிதம் இருக்கின்றன. அவை என்னவென்றால். தென்னமரம்-(தென்ன மரம்) தெங்கு. பாக்குமரம்-கமுகு. பலாமரம்-பலா. வெத்திலைக் கொடி பூமியில் பயிர் போடுகிறார்கள். இதன் சாதிவிவரம்:— தெங்கு: பிராமணன்; கொடி: க்ஷத்திரியன்; கமுகு-பாக்குமரம்; சூத்திரன்; பலாமரம்-பலா; வைசியன்; பூமி-பூமிதேவி. ஆலை-மாட்டுக் கொட்டாய்-புர-வீடு. படிப்புற-வாசல்; வீடு; குளம், களம்-கிணறு இவைகள் எல்லாம் உண்டு பண்ணவேண்டின தாவிலே பலன்களை உண்டுபண்ணப்படாது.

பூமியை ஒருத்தன் விலைக்கு வாங்கி, அவன் கையிலேயிருந்து ஒத்திக்காரன் (கரணம்) ஆகிலும், சுகவாசி (பாட்டம்) ஆகிலும் வாங்கி அனுபோகித்துக்கொண்டு வருகிற சமயத்திலே, முன் சொல்லப்பட்ட வீடுகள் எல்லாம் கட்ட வேண்டின தாவுகளிலே பலன்கள் உண்டுபண்ணினால், அந்தப் பூமியினுடைய உடையவன் பூமியைத் திரும்பி வாங்குகிற சமயத்

திலே அந்தத் தாவிலே உண்டுபண்ணின பலன்களுக்குக் குழிக்கரணம் அகப்படாது.

தென்னைமரம் எட்டுக்கோல் நீளம் தூரம் வைக்க வேணும். பலாமரம் குரங்கு தாண்டினால் எட்டாமல் இருக்கும்படி தூரத்திலே வைக்க வேணும். பாக்குமரம் ஏர் கட்டினால் எவ்வளவு தூரம் இருக்குமோ அவ்வளவு தூரம் வைக்க வேணும். இப்படி, பலன்கள் எல்லாம் வைத்து உண்டு பண்ணவேணும்.

இந்தப்படிக்கொல்லாம் ஸ்ரீ பரசுராமருடைய ஆக்கினையினாலே அறுபத்துநாலு கிராமத்துப் பிராமணர்களும் சங்கராசாரியரும் கூடி விலைக்கு வாங்குகிற பூமிகளினுடைய மரியாதைகளும், ஒற்றி பூமிகளினுடைய மரியாதைகளும், கடன் தண்டுகிற மரியாதைகளும், சனங்களுக்கு அரிசி கொடுக்க வேண்டின மரியாதைகளும் உண்டுபண்ணினர்.

ஒருவனுடைய பூமியைக் குடியானவன் வாங்கி அனுபோகம் பண்ணிக்கொண்டு வருகிற சமயத்திலே, அந்தக் குடியானவன், பூமியுடைய(வன்) முதலாளனுக்குப் பூமி வாங்கின குடியானவன் நடக்க வேண்டிய மரியாதைகள் : ஆசாரம் வந்தனம் பண்ணுகிறது. ஓசாரம்-உபசாரம்; கண் நோக்க. பூமியுடையவனுடைய வீட்டிலே ஒருவன் இறந்து போனால் அந்த வீட்டுக்குக் கருமாந்தரத்துக்கு முன்னே குடியானவன் போக வேணும்.

அதனுடைய பேரு-காழ்ச்ச அதுக்குப் பேரு-உலுப்பை. தயிரு - மோரு, வாழைஇலை, காய்கறிகள், செட்டு - மூட்டை. குரவை - மதுமம - நெய்யு-நை ? [யிரந்நாணி] (இரந்தூணு) கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறது. விருந்து சாப்பிடுகிறது. ஒப்பு - கையெழுத்து-சாச்சி - சாகிதி - சூசி. ஒற்றிக்காகிலும்-விலைக்காகிலும் பூமியை வாங்குகிற சமயத்திலே, மத்தியஸ்தருக்குப் பணம் கொடுக்கவேணும். அதினுடைய பேர் சூசிப்பணம். இளந்தல் - இளந்தலைநெல்லு. அகவீசை பூமியிலேயிருந்து கொடுக்க வேண்டியது. அடுக்குவது - அடுக்குகிறது. இப்படியெல்லாம் பூமியுடையவனிடம் குடியானவன் நடக்க வேண்டியது.

மேல்கோயிம்மை என்கிறது ராசஸ்தானம். அவருக்குக் குடியானவன் நடக்க வேண்டின மரியாதைகளினுடைய விவரங்கள்:—காலம், போகம், ஏர்வரி, சுருட்டு, கத்தை, சாணயிமை, மேல்வாரம் இப்படி ராசாவுக்குக் கொடுக்க வேண்டியன.

ஊராயி, ஸமஸ்தானம் சொல்லுகிறேன். ஊருக்கு அதிபதி, கரண்டகம் (சுண்ணும்புக் கரண்டகம்), அவரோதம், (நிச்சிதம்), விரோதம் (சத்துருத்தம்) இப்படி ஆறு ஸ்தானம். பின்னை யும் முட்டு-துவ்வலு. படி - பவக - ஆதபத்தியம் ஊராயிமை. இது இந்தவித ஸ்தானங்களும் இருக்கிற ஊரார்களும் இரண்டு வித ஸ்தானங்களிலே என்றிருக்கிறவர்களும் இருக்கிறார்கள்.

இனிமேல், அக் கோயி(ல)ம்மையினுடைய ஸ்தானங்களைச் சொல்லுகிறேன். அக் கோயி(ல்)ம்மை என்றால், கோவிலுள்ளே விசாரணைபண்ணுகிறவன். அவனுடைய ஸ்தானங்கள் என்ன வென்றால், அரி (அரிசி), திரி (பத்தி), நோக்க (விசாரணை). அகப்பொதுவாளுடைய ஸ்தானம், தட்டு, சட்டுகம்-கையும் குடையும், நடை-கழுவுக, இவைகள். புறப்பொதுவாள் என்கிற சாதிக்காரனுக்கு இருக்கப்பட்ட ஸ்தானம்; அடிச்சுதளி மெழுகுகிறது; நெல்லு குத்துகிறது; பாத்திரம் தேய்க்கிறது; தூவியது வாருக. கல்லுகழுவுக-விறகு உண்டாக்குக, இவைகள்.

புஷ்பவனுடைய ஸ்தானம் சொல்லுகிறேன். புஷ்பமும் மாலையும் கொடுக்கிறதும், மண்டபத்தைத் தெளிக்கிறதும் இவை கள். மராயாருடைய ஸ்தானங்கள்:—தட்டு முட்டு தக்கிட தரிகிட யும் தத்தோம் தோம் இவைகள். மலையாளத்திலே கோவிலிலே ஆறு பேர்கள் பரிசாரகர்கள்-தந்திரிகள் இருக்கிறார்கள். பேர் கள்:—பூசைப்பிராமணன், எம்பிரான், அகப்பொதுவாள், புறப் பொதுவாள், மாரேயான். எல்லாக் கோவில்களிலேயும் ஆறு ஆசாரங்கள் இருக்கின்றன.

எதேதென்றால் கிராமாசாரம், க்ஷேத்திராசாரம், சபாசாரம். மலையாளத்திலே ஒரு ஆசாரம், அதனமாயிருக்கிறது. அதுக் குப் பேர் நம்பிக்கூர் என்கிற விதக்காரர் ஐந்து சாதிக்காரர் இருக்கிறார்கள். அவர்களுடைய பேர் வாளநம்பி. பட்டணி நம்பி, சேரிநம்பி, ஊரில் நம்பி, பொதுவாள் நம்பி இவைகள்.

அவர்களுடைய அதிகாரங்கள் :—வாளு நம்பிக்கு, கேட்டும்-கேட்டிக்குக, கோட்டும் - கோட்டிக்க, வேட்டும் - வேட்டிக்குக, வேக்குக, வேமிக்க; இப்படி எட்டு அதிகாரங்கள். பட்டிணி நம்பி யினுடைய அதிகாரங்கள் :—கேட்டும் – கேட்டிக்குக, வேட்டும் - வேட்டிக்குக, கோட்டிக்க, வேக்க - வேப்பிக்க; இந்த ஏழு அதி காரஙகள். சேரி நம்பியினுடைய அதிகாரங்கள்:—வேட்டிக்குக - கோட்டுக, கோட்டிக்க-வேப்பிக்க; இப்படி நாலு அதிகாரங்கள்.

ஊரி நம்பியினுடைய அதிகாரங்கள்:- கேட்டிக்குக-வேட்டிக்குக, கோட்டிக்குக-வேப்பிக்குக ; இவைகள்.

பொதுவாள் நம்பிக்கு :—கேட்டுக-கோட்டிக்குக, வேட்டுக-வேட்டிக்க-வேக்குக-வேப்பிக்க; இவைகள்.

கேரளபூமிக்குப் பரிபாலனம் பண்ணுகிறதுக்கு தெய்வங்கள் வேணுமென்று எண்ணிக்கொண்டு வேட்டைக் கொருமகன் ஐயப்பன், தவச்சிலவன், கன்னிக்கல் கருமகன், உச்சமகாகாளன், அந்திமகாகாளன், கிரியாத்தன், உதிர மகாகாளன், மூண்டையன், கோலவன், பிரமராட்சதன், க்ஷேத்திர பாலன், கறிசில்வி யோகரியம்பன், பொட்டன், பிராந்தன், தெண்டன், கயறன். கண்டாகர்ணன் என்றிப்படிச் சொல்லப்பட்ட தெய்வங்களையும் உண்டு பண்ணினர்.

முன்னே பிரதிஷ்டை பண்ணியிருக்கிற மகா க்ஷேத்திரங்களிலே கன்னியாகுமரி முதல் கோகர்ணத்துக்குள்ளே மூன்று க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. அவற்றிலே ஈசுவரனுடைய கால் பெருஞ்செல்லூரிலே யென்றும், தலை திருச்சிவப் பேரூரிலே யென்றும், வயிறு திறக்களவூ ரென்றும், இப்படி ஈசுவரனுடைய தலை கால் வயிறு இருக்கின்றன என்றும் சொல்லுகிறார்கள். பின்னே திருப்பரங்கோடு, திருநாவாயை, திருவனந்தபுரம், திருச்செம்மரம், திருவில்லாமலை, குருவாயூர், திருவஞ்சைக்களம், ஆலத்தூர், மண்ணூர், போரூர், பந்தியூர், பறவூர், பெருமண்ணம், பெருமானத்துதளியில், தளிப்பறம்பத்து, கோழயூர், களிம்பூழ், திருக்காவில், திருக்கண்டையூர், நெல்லூர், யோணகா மண்ணூர், திருமண்ணூர், பந்தலூர், பங்கியங்கரை இவைகள் மகாஸ்தலங்கள்.

இனிமேல், பத்திரகாளி ஸ்தலங்கள் சொல்லுகிறேன் :—குந்நத்து, கோடிக் குந்நத்து, திருமாணம், குந்நத்து வரைக்கல், மஞ்சேரி, இரும்பெளி, வீட்டியாட்டு, வேட்டத்து, கோட்டையகத்து, கொடுங்கல்லூர், இந்தியனூர், பொற்கொட்டுச்சேரி, திருகுறும்பாமடையில், சேறக்கல், நீலம்பறை, நீலேச்சுரம், மடைப்பள்ளி, புதுப்பட்டணம், புத்தூர், குழல்குந்நத்து, சேறுகுந்ந, கடலுண்டி, திருவளயநாடு என்று இப்படிச் சொல்லப்பட்ட காவல்பாடு கோவில்களிலே ஸ்ரீ மகாதேவனுடைய உத்தரவின்படிக்கு, ஸ்ரீ பரசுராமன் படைக்கப்பட்ட பூமியிலேவந்து, பகவதி தம்பிராட்டிமார் என்கிறவர்கள் வந்து வாழ்ந்தருளினர்.

பின்னையும் முப்பது முக்கோடி தேவாதிகளும், அறுபத்து ஆறுயிரம்கோடி அசுரப்படைகளும், ரிஷிகளும், பிரம்மன், விஷ்ணு, மகேச்சுவரன் என்று இப்படிச் சொல்லப்பட்ட திரு மூர்த்திகளும் கூடி, கேரளத்திலே வாழுகிறநாளில், கேரளத் திலே வாசம் பண்ணுகிற மனுஷ்யருக்கு வரப்பட்ட துக்கங் களையும் மகாவியாதிகளையும் நிவாரணம் பண்ணி, சுகத்துடனே எல்லாருமிருந்தார்.

அந்த நாளையிலே, ஒவ்வொரு ராச்சியங்களில் ஒவ்வொரு ராசா இருந்தார். அதிலே, தினம் பிரதி மகாராசாவா யிருக்கிறது. குந்நனக் கோனதிரி-கோட்டையகத்து ராசா. வேட்ட மந்நன், வள்ளுவக் கோனதிரி; போறளாத்திரி, கோலத் திரி, திருமலைச் சேரீ நம்பூதிரிப் பட்டினன், பேரிம்படைப்பில் ராசா, அயலூர், சாற்கா-பறப்பூர், படிஞ்ஞர்-தேடம், மாடத் தின் கீழ் வேரொத்த நெடுங்கனாட்டு தேக்கடம் கூறு, கக்காரு, புன்னத்தூர், அயினி....மணக்குளம், வேங்கநாட்டு அம்பலப் பூழை, செம்பகச்சேரி, பேரிளொத்து, முரிங்கநாடு, பய்யநாடு, கோட்டூர், இரிக்காலி.

இனி, பிரதானிகளாயிருக்கிற சமீன்தார்களுடைய பேர்கள் : குதிரவேட்டத்து நாயர், ஏறநாட்டு நாயர், புழவாயை களம்மள பூக்களயூர் நம்பியார், நாவாங்கோட் நாயர், மூந்நாங்கோட் நாயர், அத்தி மண்ணு, புறச்சாதன் பொற்றை, குறிச்சியாத்து, கோழிக்கோட்டு களம்மார், ஏறனாட்டு மேனோன், சுளேங்காட்டு தலைச்சன்னவல், ஆலிப்பறம்பில் தலைச் சென்னவல், பேனழிக் கோட்டுத் தலைச் சென்னவல், ஏற நாட்டுக்கரை, ஏழு மூன்று பதினொன்று தாவழியில் திருமூலப்பாடன்மார், மங்காட்டு ராரிச்ச மேனவர், தெனவன் சேரி இளையது தலை வறை முச்சத—என்று இப்படிச் சொல்லப்பட்ட பிரதானிகளும் இருந்தார்.

அந்த நாளையிலே, எட்டுப்பேர் பவுத்தர்கள்:—கோழிக் கோட்டுக் கோவிலகம் என்கிற கள்ளிக்கோட்டு அரண்மனையிலே வந்து, ஒருசாடி நிரம்ப வில்காசு நிறைத்து, சஞ்சதாரையென்று பொய்ப்பேச்சுசொல்லி, கள்ளிக்கோட்டு ராசாவினுடைய சன்னிதானத்திலே திருக்காழ்ச்ச (நகர்) வைத்துக் கண்டார் பவுத்தர் அப்போது. இந்தச் சாடியிலே என்ன என்று ராசா

கேட்டபோது இதுக்குள்ளே பஞ்சதாரையென்று பவுத்தர் சொன்னார். அந்தச் சாடியை உள்ளே எடுத்துக்கொண்டுபோய்த் திறந்து பார்க்கிறபோது, ஆமாட (காசு) என்று தெரியப்பட்டு, ராசா வந்து, இந்தச்சாடியிலே பஞ்ச தாரையல்ல, ஆமாடையிருக்கிறது என்று சொல்லி, அந்தச் சாடியைப் பவுத்தருக்குத் திரும்பிக் கொடுத்தார். அடியேன் அறியவில்லையென்று ராசாவுடனே பொய் உத்தரவு சொல்லி, பவுத்தர்கள், அந்த ஆமாட சாடியைத் திரும்பி வாங்கி, இரண்டாந்தரம் பஞ்சதாரைச் சாடியை ராசாவுக்குக் கொடுத்தனர்.

மகா சத்தியவானயிருக்கிற ராசாவானபடியினலே இந்த ராசாவினுடைய ராச்சியத்திலே நமக்கு இருக்க வேணுமென்று பிற்பாடு பவுத்தர்கள் யோசனை பண்ணினர்கள்.

ராசாவைக் கேட்டபோது, "எல்லாராச்சியங்களும் நம்முடைய வசமானபடியினலேயும், நம்முடைய ராச்சியங்களிலே பவுத்தர் இல்லாதபடியினலேயும், (2) உங்களுக்கு சம்மதியான இடத்திலே நீங்கள் இருங்கோள்'' என்று ராசா பவுத்தருக்கு உத்தரவு பண்ணினர்.

அதன் பிற்பாடு, யோனகர் சாலியத்துக்குப் போய், பறப்பூர் ராசா அவர்களைக்கண்டு, சேறுநாட்டுக்குப் போய், திருப்பூர் அம்பலம் கோயிலுக்குள்ளே புகுந்து இருந்தார். அப்போது கோவிலிலே வாசம் பண்ணுகிறவர்களுக்கும் பவுத்தருக்கும் சண்டை வந்தது. அந்தச் சமயத்திலே, பவுத்தரிலே யொருவன் இறந்து போனன். அவனைக் கோவிலிலே புதைத்துப்போட்டு எங்கேயாகிலும் இருந்து கொள்ளுகிறதற்கு ராச்சுலப்பன் ராசாவினுடைய உத்தரவு ஆயிருக்கிறது என்று சொல்லி, அந்தக் கோவிலிலே குடியிருந்தார். பின்னையும் செறுதுகிர்த்திரமத்தினலே ஸ்திரீகளைப் பிடித்து, தங்கள் வசம் பண்ணிக்கொண்டார். அங்கே பவுத்தர்கள் ஏழு வீடுகளையும் கட்டி வைத்துக்கொண்டு, வர்த்தக வியாபாரத்துடனே யிருந்தார்கள். அந்த வருஷத்துக் கலி பௌத்த விருத்தி சங்கடம் 3231. நாள் 179.

அப்படியே அநேகம் நாள் இருக்கிறபோது, பவுத்தருடைய வம்மிசம் விருத்தி யாச்சுது. சாதுக்களைப்பிடித்துப் பலவந்தத்தினலே தொப்பி போட்டு வைத்தும், கெட்டுப்போன சனங்களைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கியும், இப்படி சனங்களைச்

சேர்த்து, தொப்பி போட்டுவைத்து, இசிலாமை பண்ணி வைத்தும், சனங்களுடைய ஆஸ்திகளைப் பிடுங்கியும், முக்கவதாதிகளைப் பிடித்துத் தொப்பி யிடுவிடுத்தும், இசிலாமை பண்ணிவைத்தும் குலவிருத்தியானர். பின்னே, சாதுக்களை உபத்திரவம் பண்ணியும், சற்சனநிந்தை பண்ணிக் கொண்டும் இருந்தது பவுத்த குலம். வில்லுவ மங்கலத்துச் சிவாங்கள் என்கிற பிராமணச் சிரேட்டன் ராமேச்சுவரத்துக்குப் போகிறதற்காக, கோழிக் கோட்டுத்தளியில் கோவிலிலே வந்தார். அப்போது அங்கே யிருந்து புன்துறைக் கோனதிரி ராசா, இந்த ஸ்தானத்துக்கும் சொருபத்துக்கும், அல்லல் துக்கமும் மகாவியாதிகளும் போக் கடிக்கிறதற்காகத் தானங்கள் செய்யவேணும். அது, என்ன என்ன தானங்கள் செய்ய வேணும் என்றும், எப்படி யெல்லாம் செய்யவேண்டியது என்றும் சிவாங்களுடனே கேட்டார். அப்போது சிவாங்கள், ராசாவுக்குத் திட்டம் பண்ணின வயணம் :—

இந்த க்ஷேத்திரத்திலே வருஷம் ஒன்றுக்கு, துலாமாதத்திலே ரேவதி முதல் ஏழுதின வரைக்கும் வந்த சனங்களுக்கெல்லாம் சாப்பாடும், ஸ்மார்த்தப் பிராமணருக்கு நூற்றொன்று (2)கட்டின முடிச்சுகளையும் தானம் பண்ண வேண்டியது. இதுவுமல்லாமல், தினம் சகத்திர போசனம் பண்ணிவைத்துக் கொண்டு, துலாபாரம், இரணிய கர்ப்பம், மகாமிருத்தியும் செபம், பறக்கும் - கூத்தும் என்று இப்படி ராசாக்களுக்குப் பிரதானமாய்ச் சொல்லப்பட்ட கிரியைகளையும், பிரதானப்பட்ட கணபதி ஓமம், புஷ்பாஞ்சலிகளையும் பண்ணி வைக்கவேண்டியது. அவரவர்களுக்கு சுவதந்தரமான கோவில்களிலே அந்த சுவதந்தரக்காரர் பரிபாலனம் பண்ணிக் கொண்டு வரவேண்டியது. அவைகள் நம்முடைய வசமாய் வந்தால், பண்ணிக்கொண்டிருந்த கவை காரியங்களிலே தாழ்த்தி வராதபடிக்குப் பரிபாலனம் பண்ணிக்கொண்டுவரவும். கோவில்களிலே விளக்குத் தீபமும், வேலையும் (திருநாள்), வீடும், போசனம் பிராமணரத்தியயனங்களுக்கெல்லாம் பாட்டுப் பாடுகிறதும், கூத்தும்—கூத்து மனுஷர் வேஷம் போட்டு ஆடுகிறதும், திரியும் தீப்பட்டிகள் பிடிக்கிறதும், உற்சவங்களும் என்று இப்படிச் சொல்லப்பட்டவைகளை யெல்லாம் தாழ்த்தி வராமல் செய்வித்துப் பரிபாலனம் பண்ணிக்கொண்டு வரவேணும். ஆனால், இந்த ராச்சியமும் சனங்களும் ராச்சிய வங்கிஷமும்

பிரதிதினம் விருத்தியாகுமென்று ராசாவுடனே சிவாங்கள் சொல்லித் திட்டம் பண்ணினர்.

இந்தப்படிக்கெல்லாம் செய்து பரிபாலனம் பண்ணிக் கொண்டு வருகிறதுக்குத் திரவியமில்லையே யென்று சிவாங் களுடனே ராசா கேட்டபோது, அதுக்குச் சிந்தனை வராது. கடன் வாங்கிச் செலவு பண்ணி, யிதுகளை யெல்லாம் நடப்பித்துக் கொண்டு வருகிற சமயத்திலே, நினையாமல் திரவியம் வந்து சேருமென்று சிவாங்கள் ராசாவுடனே சொல்லி அனுக்கிர கத்தையும் பண்ணினர்.

அந்தப்படியே சந்நியாசியாயிருக்கிற சிவாங்களுடைய திட்டப்படிக்கு விசுவாசத்துடனே ஆரம்பம் பண்ணி ராசா அரண்மனையும் கட்டி வைத்துக்கொண்டு இருக்கிற நாளையிலே, கற்கடக வியாழம் கும்ப மாதத்திலே, திருநாவை கோவிலிலே மாமாக வேலை யென்கிற உற்சவம் பண்ணுகிறார் என்றும், மாமாங்கத்தின் நாளைக்கு அநேக சனங்களெல்லாம் வந்து தீர்த்தம் ஆடுவாரென்றும், சோவுரக்கூறு ராசா நிலவாடு நிலைப்பார் என்றும், கள்ளிக்கோட்டு ராச்சியத்திலே யிருக்கிற ஒரு யோனகன் கேள்விப்பட்டு, அந்த மாமாக வேலையைப் பார்க்க வேணுமென்று எண்ணிக்கொண்டு புறப்பட்டு, குந்நனக் கோனதிரி ராசாவிடம் உத்தரவு வாங்கிப் போய், மாமாங்க வேலையைப் பார்த்து, திரும்பி வந்து, மாமாங்க வேலையி னுடைய மகிமைகளை யெல்லாம் குந்நனக் கோனதிரி ராசா விடம் அறிக்கை பண்ணினன். மாமாங்கவேலைக்குத் திவ்விய தீர்த்தம் ஓடுகிறது தவிர, மற்று என்ன அதிசயம் இருக்கிறது? என்று ராசா அவர்கள் யோனகனைக் கேட்டபோது, அங்கே ராசாக்களுக்கு விதியான மரியாதைகள் ஒன்று அல்ல என்று அறிக்கை பண்ணினதுக்கு, அந்த ஸ்தானாதிகாரங்க ளெம்முடைய வசம் பண்ணிக்கொள்ளுகிறதற்கு நம்மாலே பலமில்லையே யென்று ராசா சொன்னர்.

அப்போது, அந்த ஸ்தானாதிகாரங்களை யெல்லாம், நமக்கு வேண்டினதேயானல், அடியேன்கள், பிடித்து வசம் பண்ணிக் கொடுக்கிறோமென்று ராசாவுடனே யோனகன் சொன்னன். அந்தப்படி நீ செய்தாயேயானல் மாமாக வேலைக்கு நிலவாடு நிலைக்கிற சமயத்திலே உன்னை வலது பக்கத்திலே நிறுத்து கிறேன் என்று ராசா யோனகனுக்குச் சொன்னன்.

பிற்பாடு, யோனகனும் சனங்களும் கடலூடேயும், சமுத்திரத்து வழிக்கும் மலையாளம் காடுடேயும் மற்றுமுண்டான சனங்கள் கரைவழிக்கும் புறப்பட்டுப் போய், சண்டை பண்ணி ஒவ்வொரு ராச்சியங்களையும் ஒவ்வொரு கிராமங்களையும் க்ஷேத்திரங்கள் என்கிற கோவில்களையும் வசம் பண்ணினர். இரண்டாந்தரம் வியாழப்பட்டம் வருகிற சமயத்துக்கு இந்த யோனகனும் ராசாவும் சனங்களும் திருநாவாயிலே வந்து சேர்ந்தனர். அன்றைக்கு அந்த யோனகனுடைய ஆதிக்கியத்தினாலே கம்பவெடி வைத்தான். பின்னையும் கப்பலும் வைத்தான். முன்னே ஒருவரும் பார்க்காமல் இருக்கப்பட்ட வேடிக்கைகளை யென்றைக்கும் தாழ்த்தி வராமல் இருக்கிறதற்கு வேண்டின ஸ்திரீகளையும் வைத்தான்.

அப்போது, அதிக சந்தோஷத்துடனே ராசாவும் யோனகனுக்குக் கோழிக்கோட்டு கோசை யென்கிற பேரைக் கொடுத்தார். பின்னையும் அநேகம் அதிகாரங்களையும் கொடுத்தார். முன்னே அந்த ராச்சியம் சோவரக் கூறு ஆகியிருந்தது. அன்றே முதல் பந்நியூறுக்கூறு ராச்சியம் ஆச்சுது. அந்தப் பகையினாலே மாமாக வேலை யென்கிற உற்சவத்து நாளிலே திருமானும் குந்நத்து அம்மனுடைய ஆக்கினையினாலே ஆறங்கோட்டு சுவருவத்து சனங்கள் இப்பவும் வந்து இருக்கிறார். அதுக்குப் பேர் காவேறுமரி. குந்நனக் கோனதிரி ராசா தன் வசம் பண்ணிக்கொண்ட ராச்சியத்துப் பிரதானிகளுக்கு, முன்னூற்றுத் தொண்ணூறு பல்லங்கித் தண்டுகளையும் ஆயிரத்து இருநூறு குடைகளையும் கொடுத்தார். பின்னையும் அநேகம் அதிகாரங்களையும் வெகுமானங்களையும் கொடுத்தார். அன்று முதல் ஆறங்கோட்டு சுவருவத்து ராசாவினுடைய மேல் விசாரணைவிட்டு நெடியிரிப்பு ராசாவினுடைய மேல்விசாரணை ஆச்சுது. அன்று முதல் குந்நனக் கோனதிரி ராசாவினுடைய சனங்கள் அந்த ராச்சியங்களிலே ராத்திரியும் பகலும் நடப்பார். பின்னையும் ஒவ்வொரு ராச்சியங்களையும் நகரங்களையும் தன் வசம் பண்ணி வாழ்ந்தார், குந்நனக் கோனதிரி ராசா.

அந்த நாளையிலே அந்த ராச்சியத்துக்கு சத்துருவில்லாமல் ஆச்சுது. தெற்கே வேணாட்டு அடிகளும், வடக்கே கொல்லத்திரி ராசாவும் அல்லாமல், மற்றொரு ராசாக்களும் குந்நனக் கோனதிரி ராசாவுக்கு எதிரில் நில்லாதவர் ஆயினர். பின்னே

யும் அந்நிய ராச்சியங்களுக்கு ராசாவாயிருக்கப்பட்டவர்களிலே புனனுடன், மைசூரான், மை லோம்பன், சடக்கன், முதலன், மூக்குமறியன், முதலப்பாச்சா, இக்கேரியான், மலுக்கி அம்மாசி, கொங்கண பாண்டியன், காசி ராசா, சோழ ராசா, வலச்செயன், இங்கிரிசு, பரிந்திரிசு, பறங்கிபவுரவன், தீவாழி புதுக்க ராசா என்று இப்படிச் சொல்லப்பட்ட ராசாக்களும், அவருடைய சனங்களும், முன் பூர்வீகத்திலே சமுத்திர வழிக்கும் கரை வழிக்கும் இந்த ராச்சியங்களை செயம் பண்ணுகிறதற்காக வருவார். அப்போதும் அவர்களெல்லாம் தோற்றுப் போயிருக்கிறார். அந்த நாளையிலே ஒரு மாற்றானு மில்லாமல் ஆச்சுது. இந்தப் பூமியிலே யிருக்கப்பட்ட தொண்ணூற்றுஆறு நகரங்களிலே பிரதானப்பட்ட நகரமான கள்ளிக்கோட்டையிலே வொரு நாளைக்கும் அனர்த்தம் வராது. அது என்ன காரணத்தினலே யென்றால், செம்மங்காட்டு அவ்வாயன் என்கிறவன் ஸ்ரீபகவதியைச் சேவித்து, பிரத்தியட்சம் பண்ணி, அம்மா நீ என்னைப் பார்க்கிறதற்குக் காலையில் காந்த பறம்பத்தும், அங்கே என்னைப் பாக்காமல் போனல், மத்தியான்னத்துக்குமேல் நகரத்துக்கு வரவேணுமென்றும், பின்னே சாயங்காலம் சமைமுக்காட்டிலே வரவேணுமென்றும் சொல்லிச் சத்தியம் பண்ணிக்கொண்டும், அவன் அன்றையதினம் தானே இறந்து போனன். நீ வருகிற சமயத்திலே இந்த மூன்று தாவிலேயும் என்னைப் பார்க்கவில்லையானல் நான் வருகிற வரைக்கும் இருக்கவேணு மென்றும் சொன்னன். அந்தக் காரணத்தினலே ஸ்ரீபகவதி அம்மனுக்கு ஒரு நாளைக்கும் அந்த மூன்று தாவுகளையும் விட்டுப் போடக் கூடாது.

இனி மேல் ஐயப்பன் உண்டானதினுடைய விவரம் :—ஒரு அசுரன் ஸ்ரீ மகாதேவனைப் பிரத்தியட்சம் பண்ண வேணுமென்று எண்ணிக்கொண்டு, தவத்தைச் செய்தபோது, மகாதேவன் பிரத்தியட்சமாய், உனக்கு என்ன வரம் வேணுமென்று கேட்டதற்கு, "சூண்டாணி விரலினலே யாரையாகிலும் தொட்டேனேயானல் அவன் சாம்பலாய்ப் போகவேணுமென்று வரம் கொடுக்கவேணும் பகவானே" என்று அசுரன் அபேட்சித்தான். அவன் கேட்டபடிதானே பகவான் வரம் கொடுத்தார். அப்போதே அந்தப் பகவானைத்தானே தொட்டுச் சாம்பலாக்கவேணுமென்று எண்ணிக்கொண்டு பகவானைத்தானே தொடுகிறதற்கு

ஆரம்பித்தான். அந்த வேளையிலே பகவான் பயத்துடனே ஓடத் தலைப்பட்டார். அப்போது ஸ்ரீ நாராயணன் மோகினி வேஷமாய் அசுரன் முன்னே போய் நின்று கொண்டார். அதைக் கண்டு அசுரன் மாமால் பூண்டு காம பரவசனாயினன். உன்னைக் கலியாணம் பண்ணவேணுமென்று சொன்னன்.

அதைக்கேட்டு, என்னைக் கலியாணம் பண்ண வேணுமானல் நீ என்னை விட்டுவிடுகிறதில்லையென்று உன்னுடைய இருதயத்தைத் தொட்டுச் சொல்ல வேணும்; அப்படி நீ சொன்னயேயானல் எனக்கு நம்பிக்கை வருமென்று மோகினி சொன்னதைக் கேட்டு, தன்னுடைய இருதயத்தைத் தொட்டுச் சொல்லுகிறதற்கு ஆரம்பித்துத் தொட்டபோது அசுரன் சாம்பலாய்ப் போனன்.

அதன்பிறகு, அந்த மோகினி ரூபத்தை ஸ்ரீ மகாதேவன் பார்த்து மோகப்பட்டு, மோகினியுடனே சம்போகம் பண்ணினர். அன்றைக்கு ஸ்ரீமகாதேவனுடைய விந்து ஸ்ரீ நாராயணருடைய வயிற்றிலே வீழ்ந்து தீரத்துடன் மேல் பிறந்தான் ஐயப்பன்.

ஆனதனல் ஐயப்பன், ஸ்ரீ மகாதேவனுக்கும் ஸ்ரீ நாராயணனுக்கும் கூடிப்பிறந்தவர்.

பிற்பாடு, ஸ்ரீ மகாதேவனுடைய உத்தரவுப்படிக்கு பூதநாதனாய்ப் பூதலத்துக்கு நாதனாய், கேரளபூமியிலே வந்து உலகில் விழிந்தார்.

பின்னையும் பாண்டிய ராசாவைக் கண்டு, புலியைக் கட்டிப் பாலைக் கறந்து பாண்டியனுக்குக் கொடுத்தார்.

அதன்பிறகு ஏழு ஒண்டை யெடுக்கிறமட்டும் சுவர்ணங்களுடனே-அசம்மறவட்டத்து-கொளத்தூர், செறுப்புள்ளச்சேரி, நிர்மகை, தக்கோட்டை, பனப்பள்ளிக்காவு, வளோர், மேற்கடற்பள்ளி, கரிக்காட்டு என்று இப்படிச்சொல்லப்பட்ட காவல்பாடு கோவில்களிலே குடியிருந்து, கோசனங்களுக்கு வரப்பட்ட துக்கங்களையும் மகாவியாதிகளையும் நிவாரணம் பண்ணிக்கொண்டு ஐயப்பன் வாழ்ந்து அருளினர்.

குறும்பர்நாடு ராச்சியத்தினுடைய வயணம்:— குறும்பியாதிரி ராசாவினுடைய ராச்சியத்திலே குறும்பர்நாடு முப்பத்தாறு காதம் வழி ராச்சியம். ஆயிரத்து இருநூறு (1200) ஊர்களும், முப்பதினயிரம் சனங்களும், ஆறுயிடவக—ஆறுசனங்

களும், இருபத்திரண்டு காரணவர் - இருபத்திரண்டு தலைமையான சனங்களும், பாலசேரிக்கோட்டையில் வேட்டைக்கொரு மகனும் முப்பத்திரண்டு குறுப்பன்மாரும்—நாலு பாடன்மாரும், சேம்பர் நேடும்பர் இரண்டு வழுந்நவன்மாரும், தியாட்டு, மேற்குளங்கரை இரண்டு தாய்வழியில் ராசாக்களும் இப்படிக் குறும்பர் நாட்டினுடைய வயணம்.

தேனயஞ்சேரி சின்ன இளையது தவிர, மற்ற அனைவோர் களும் தெற்கு ராச்சியத்திலே சண்டைக்குப்போன சமயத்திலே, கள்ளிக்கோட்டைக்குப் பறங்கி விசுவாசத்துடனே வந்து, கோழிக்கோடு ராச்சியத்தைத் தன் வசம் பண்ணிக் கொண்டான்.

அப்போது, பறங்கி செய்ம் பண்ணுகிறதற்காக தேனயஞ்சேரி சின்னவிளையது, குறும்பியாதிரி ராசாவுக்கு எழுதியனுப்பி வைத்து, அந்த ராச்சியத்து சனங்களை அழைப்பித்து, பறங்கி இருக்கிற கோட்டையை வாங்கினர். வேட்டைக்கொரு மகனுடைய அனுக்கிரகத்தினாலே பறங்கி அநேகம் திரவியங்களையெல்லாம் விட்டுவிட்டுப் போய்விட்டான். அந்தச் சமயத்திலே அகப்பட்ட திரவியங்கள் இவ்வளவு என்று அளவுஇல்லை.

அதன்பிற்பாடு, குந்நனக் கோனாதிரி ராசா அவர்கள் வேட்டைக்கொருமகனை நம்முடைய ராச்சியத்திலே குடிவைக்க வேணுமென்று எண்ணிக்கொண்டு கள்ளிக்கோட்டுக் காவலகம் மற்றும் அநேகம் காவல்களிலேயும் குடிவைத்தார்.

பிற்பாடு, திருவளயநாட்டு அயம்—வேட்டைக்கொருமகன் என்று பிரஸ்தாபப்பட்டு இரண்டு பரதேவதைமாருடனேயும் அச்சன், இளையது, பணிக்கர், பாரும்பி என்று இப்படி நாலு மந்திரிமார்களுடனேயும், முப்பதினாயிரம் பதினாயிரம் பய்யனாட்டு லோகர் என்று இப்படிச் சொல்லப்பட்ட சனங்களுடனேயும் (பிரசைகளுடனேயும்) இருந்தார், குந்நனக்கோனாதிரி ராசா.

ஏறநாடு ராச்சியத்து சனங்களுக்கும் பெரிம்படப்பு ராச்சியத்து சனங்களுக்கும் தங்களிலே சண்டை யிருக்கிறது. பெரிம்படப்பு ராச்சியத்திலே சனங்கள் மெத்த விருக்கிறபடியினாலே பெரிம்படப்பு என்று சொல்லுகிறார்.

பெரிம்படப்பு ராச்சியத்தினுடைய வயணம்:—பெரிம்படப்பு ஐம்பத்திரு காதம் வழி ராச்சியம், பதினெட்டு மாடம்பிகள்

என்றால் பதினெட்டு சமீன்தார்கள். நாற்பத்திரண்டு காரியக் காரர்கள் என்றால் நாற்பத்திரண்டு மந்திரிகள். இப்படியிருக்கிற பெரிம்படப்பு ராச்சியத்து சனங்கள் குந்நனக் கோனதிரி ராசா வுடனே சண்டைக்குத் தோற்கமாட்டார்.

கேரள ராச்சியத்திலே ராசாக்களிடத்திலே யிருக்கப்பட்ட சனவிவரம் :—கோலத்திரி ராசாவுக்கு மூன்று நூற்று எழுபத் திரண்டாயிரம் நாயர் சனங்கள் இருக்கிறார்கள். அவருக்குச் சுருக்கெட்டிச் சேவகம், சுரிகை என்கிற ஆயுதத்தைக் கட்டி, ராசாவண்டை சேவகம் பண்ணுகிற சாம்பிரதாயம் இருக்கிறது.

போர்வாழிச்சுருவத்து ராசாவுக்கு 72 ஆயிரம் சனங்கள் இருக்கிறார்கள். வள்ளுவக் கோனதிரிக்குப் பதினாயிரம் நாயர்கள். வள்ளுவர் பாட்டுக்கு மூன்று ஆயிரம் நாயர்கள். வேணாட்டு அடிகளுக்கு மூன்று இலட்சத்து எண்பத்திரண்டு ஆயிரம் நாயர் கள். ஏறநாட்டு மேனவருக்கு நாயர் ஐயாயிரம். கோழிக் கோட்டு தலச்சந்ந நாயருக்கு ஐயாயிரம். கோவில்பாடுக்கு ஐயாயிரம் நாயர். பய்யநாட்டு நம்படிக்கு ஆயிரம் நாயர். மங்கா நாட்டு நம்படிக்கு பன்னிரண்டு நாயர். மூக்குடைக்காட்டு மூன்று தாய்வழிக்காரருக்கும் ஐந்நூறு பேர். வண்டமுக்கில் கிழக்கே நம்படிக்கு ஆயிரம் நாயர். இவைகளெல்லாம் கட்டக் கடவுக்கு மேற்கே. பின்னேயும் புதுக்கோட்டுக்கூற்றில் திரு மலைச்சேரி நம்பூதிரிப்பாடுக்கு மூவாயிரம் நாயர். மாணியூர் நம்படிக்கு முந்நூறு நாயர். பேருவண்டமுக்கில் படிஞ்சாறை நம்படிக்கு ஐந்நூறு. கோட்டை மூலப்படை நாயகனுக்கு முந்நூறு நாயர். இவைகளெல்லாம் காட்டக்கடவுக்கு மேற்கே புதுக்கோட்டுக் கூற்றிலே சேர்ந்தவைகள். நெடுங்க நாட்டு ராச்சியத்திலே தேக்கும் கூற்றில் கர்த்தாவுக்கு முந்நூறு நாயர். தேக்கும் கூற்றில் தெற்கே நாயர்க்கு நூறு நாயர். இதுகளும் காட்டக்கடவுக்கு மேற்கேதான். நெடுங்க நாட்டுப் படைநாயற்கு முந்நூறு நாயர். கண்ணனூர்ப்பட் நாயருக்கு ஐந்நூறு நாயர். தெற்கும் கூற்றில் வடக்கே நாயர்க்கு நூறு நாயர். கரிம்புழை இலம்புலாச்சேரி நாயர்க்கு நூறு நாயர். மேற்படி மூதியாலட்டு நாயற்கு நாயர் முந்நூறு. சேனங்காட்டு கோலப்பள்ளி நாயற்கு நாயர் முந்நூறு. மோளஞ்சுப்ப நாயற்கு நாயர் முந்நூறு. மங்கரை வடக்கும் நூற்கு நாயர் எழுநூறு. வேம்மனூர் வெள்ளாட்டு அதிகாரற்கு முந்நூறு. குழல்குந்நத்து

புளியக்கோட்டு மூத்த நாயற்கு நாயர் நூறு. ஆலிப்பரப்பில் மேனவருக்கு நாயர் நூறு. மேலே தலப்பாருக்கும் கேளநெல் லூரில் தலப்பாருக்கும் கூடி நாயர் எழுநூறு. மேலே தலப் பாருடைய சனங்களும் கூடி குதிரை வேட்டத்து நாயருக்கு ஓர் ஆயிரம். வெங்கநாட்டு நம்படிக்கு நாயர் ஓர் ஆயிரம். மாசுற்றி ராமனுள்ளாடற்கு நாயர் ஓர் ஆயிரம். வடக்கரை கூற்றில் பிலாச்சோரி நாயற்கு ஐந்நூறு. இதுகளிலே சவரக் கூற்றிலே சொல்லப்பட்ட சனங்களெல்லாம் தாமூதிரி ராசா வுடைய சேவகத்துக்காரர்: புதுக்கோட்டுக்கூற்றிலே சொல்லப் பட்ட சனங்கள் எல்லாம் விளங்கூறு நம்பியாதிரி திருமூலப் பாட்டு சேவகர்கள்.

ஸ்ரீபரசுராமர் படைக்கப்பட்ட பூமியிலே பூதேவர்கள் பொழுது விடிவதற்கு முன்னே ஸ்நானம் பண்ணி கர்மங் களைப் பண்ணுகிறதை விகாதம் பண்ணுகிற சனங்களை சங் காரம் பண்ணுகிறதற்காக சூத்திரசாதிகள் ஆயுதபாணி களாக நடக்கிறதற்கு உத்திரவு பண்ணினார். பிராமணரைக் கண்டதேயானால் சூத்திரன் ஆயுதம் வழங்(ணங்)க வேணும். ஆயுதத்துடனே நமஸ்காரம் பண்ணவேணும். பிராமணர் தெரிந்தவராயிருந்தால் இவனுக்கு ஆசீர்வாதம் பண்ணு வார். சூத்திரன் பிராமணனுக்கு ஆறடி தூரம் விலக வேணும். தொட்டால் ஸ்நானம் பண்ணித் தன்னை சனங் கள் எல்லாம் பன்னிரண்டு அடிதூரம் விலக வேணும். தீட் டான சனங்களிலே சிறிது பேர்கள் பதினெட்டு அடிதூரம் விலக வேணும். சிறிது பேர்கள் இருபத்துநாலு அடி தூரம் விலகவேணும். சிறிதுபேர்கள் முப்பத்துஆறு அடி தூரம் விலக வேணும். சிறிது பேர்கள் நாற்பத்திரண்டடி தூரம் விலக வேணும். சிறிது பேர்கள் அறுபத்துநாலடி தூரம் விலக வேணும். சிறிது பேர்கள் எழுபத்திரண்டடி தூரம் விலக வேணும். முன்சென்மத்திலே அதிகம் அதிகம் தோஷம் செய்யப்பட்ட சனங்கள் இந்தச் சென்மத்திலே நீச சாதியாய்ப் பிறந்து தூரம் தூரம் விலக வேண்டி வருகிறது. அவர் தோஷம் செய்தவரானபடியினாலே தூரம் தூரம் விலக வைக்கிறார். குணத்தைச் செய்தவர்கள் பிராமணராய்ச் செனிப்பார்கள். நன்மையைச் செய்யப்பட்ட சனங்கள் பரசுராம பூமியில் வந்து செனித்து புத்திர சம்பத்தையும் அர்த்த சம்பத்தையும்

சம்பாதித்து துக்கங்களையும் மகா வியாதிகளையும் நிவாரணம் பண்ணி அந்திய காலத்திலே பகவானுடைய ஸ்ரீபாதத்துடனே சேருவார். அறுகுல செய்கிறதும், அறையும், அம்பலமும், முறிக்கையும் இப்படிப்பட்ட அதிக்கிரமங்களைச் செய்தாரேயானல் அவரும் நீச சாதிகளிலே வந்து சனித்து மகாவியாதி, தாரித்திரியம் இவைகளை அனுபவித்து, நரகத்திலே வீழ்ந்து கிடப்பார். சத்கர்மங்களைச் செய்து அநேக காலம் நல்லவைகளைச் செய்து நல்ல சென்மம் செனித்து சுகத்துடனே யிருப்பர். ஸ்ரீபரசு ராமனைச் சேவை பண்ணிப் பிரத்தியட்சம் பண்ணிக்கொண்டு ஸ்ரீமகாதேவனுக்குப் புத்திரனுய்ப் பிறந்த சங்கராசாரியர் விக்கியானத்தினலே சகல வித்தைகளையும் கற்றுக்கொண்டு சகல புருஷருக்கும் உத்தமனுயிருந்தார். அவர் இந்தப்படி யெல்லாம் உத்தரவு பண்ணி, சர்வக்கினீயப்பீடம் ஏறினுர்.

மங்கரையிலே மூன்று பிரபுக்கள் இருக்கிருர்கள். அவர் யார் யார் என்ருல், தெற்கே வேணுட்டு அடிகள், வடக்கே கோலாத்திரி ராசா குந்நனக் கோனுதிரி, மத்தியிலே நம் முடைய ராசா குன்னனக் கோனுதிரி இவர்கள். நம்முடைய ராசா குந்நனக் கோனுதிரி ராசாவினுடைய திருநெற்றிக்கு எதிராக மூன்று லட்சத்து எண்பத்திரண்டாயிரம் பிரபுவாயி ருக்கிற கோலத்திரி ராசா சண்டை பண்ணயில்லை.

அந்தக்காலத்திலே, வேணுட்டு அடிகளுடைய சேவகரில் ஒருவன் கண்ணெற்றிக் கடவு என்கிற ஆற்றங்கரையிலே, ஒரு பிராமணனை நிற்க வைத்து ஊக்க, நித்தியகர்மம், குளி-ஸ்நானம் இவைகளைத் தடங்கல் பண்ணிக்கொண்டு இருந்தான். அப்போது நம்முடைய கள்ளிக்கோட்டை ராசாக்களிலே இடத் தருலப்பட்டு ராசா அவர்கள் அங்கே போய், அவனைக் கொலை செய்து, பிராமணனுடைய ஸநானமும் நித்திய கருமமும் நடப் பித்து ராசா திரும்பி வந்தார். அதற்கு வேணுட்டு அடிகள் பரிபவம் கோபத்துடனே சேற்றுவாயை என்கிற ஊருக்குத் தெற்கே நம்முடைய ராசாவினுடைய மேல்க்கோயி............ மேலதிகாரம் நடக்கலாகாது என்று எண்ணிக் கொண்டு, அந்தப்படிக்கு சனங்களுடனே உத்தரவு பண்ணினுர். அந்த சமாசாரத்தை, (இ)[எ]டத்தருலப்பட்டு என்கிற ராசாவுக்குத் தெரிய வந்து, யோகம், திகஞ்ஞு சனங்களுடனே புறப்பட்டு,

சேற்றுவாய் ஊர்தாண்டி, காஞ்சூ புழ என்கிற ஆறு தாண்டி, வெப்பில் என்கிற ஊர்வழியே கொச்சிஅழி என்கிற முகத்து வாரம் தாண்டி, கொச்சியின் ஊர்வழியே புறப்பட்டு, பயற்றுக் காட்டுப்பாலம் என்கிற வாராவதி தாண்டி, திறக்குந்நப்.......... .......புழக்கல் வழியே கார்த்தியப்பள்ளிக்குப் போய், படனட் டுக்குப் போன சமயத்திலே, வேணாட்டு அடிகள் நம்முடைய ராசாவினுடைய திறக்காலில் வந்து அபயம் கேட்டான். குந்நனக் கோனதிரி ராசாவினுடைய மேல்விசாரணை நடக்க லாகாது என்று உத்தரவு பண்ணின அபராதம் போகிற தற்காக, வெள்ளிக்காளம், தொக்கு, வெள்ளிக் கேட்டினது பாக்கியையும், ஆனையையும் வடக்கு முகமாக வைத்துக் கொடுத் தார் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன். அப்போது ராசா அவர்களும் திக்கு விசயமாய் வீரவாத்தியத்துடனே வடக்கே எழுந்தருளினர். பின்னையும் திருவனந்தபுரத்திலே வந்து தனக்குட்பட்ட ராச்சியங்களைத் திருவனந்தபுரத்துப் பகவா னுக்கு விளக்குக்கும், நித்தியச் செலவுக்கும்..............வடக்குத் திரும்பி எழுந்தருளினர்.

எடத்தறலப்பாடு ராசா சேரமானுடைய உத்தரவினலே கீழேழாயிரத்து எழுநூற்றண்டு வருஷம் நெடியிருப்பு ராச்சி யத்திலே பட்டோல் பழநட பழமுனிகள் வசனம் என்று இப் படிச் சொல்லப்பட்டவைகளுக்கு அழிபிழ-அழிவும் தப்பும் வரா மல் இருக்கிறதற்கு, நம்முடைய குந்நனக் கோனதிரி ராசாவி னுடைய மேல் கோயிம்ம ஸ்தானம் மேல் விசாரணையினலே யும், அகம்படிச், சனம், கெட்டிச் சுற்றிச் சேவகம் - என்கிறவை. சேவக சனங்கள் இடுப்புக்கட்டிச் சேவகம் பண்ணுகிறபடி யினலே, அநுபவத்தில் முப்பதினயிரத்தில் முன்பிலுள்ள வருடைய நித்திய அன்னுவேஷணம். முப்பதினயிரத்திலே பழமையான சனங்களுடைய நிதநிய விசாரணையினலேயும் அன்பாடி கோவிலகம் என்கிற அரண்மனையிலே பிறந்து வயது ஆய் மூப்பு வந்து திருமுடிப் பழயரி சார்த்தி, அரிசி யிட்டு, வாழ்ந்து, திருப்பட்டம் கட்டித், திருநாடு வாழ்ந்து, வீ(ரிய)[ர] சுவர்க்கம் அடைந்த ராசாக்களுடைய திருமனதின லேயும் கிருபையினலேயும், 33 அடி நடந்து தளர்ந்து இறந்து மண் சேர்ந்து பெரியோர்களுடைய நிலைமையினலேயும், நிழலில் பரதேவதையாருடைய அனுக்கிரகத்தினலேயும், மேல் சொல்

லப்பட்ட பட்டோலப் பழங்கட பழமுனிகள் வசனம் இவைகளுக் கும், நம்முடைய ராசாவினுடைய மேல் அதிகாரத்துக்கும், நம் முடைய கூலிச் சேவகத்துக்கும் நப்பும் அழிவும் வராமலிருக் கிறதற்கு............

அகம்படிச் சனம் மூன்று கூட்டத்துச் சனங்களும், லோகரும், முப்பத்திரண்டு தளவாட்டுக்காரரும் கூடி, வெண் புலாவு என்கிற மரத்தின் நிழலிலே பலிசை கவிழ்த்து வைத் துக் கொண்டிருந்து, திருவளய நாட்டு அம்மன்—வேட்டைக் கொருமகன் இவர்களை முன்நிறுத்தி, சொல்லிக் கற்பிக்க வேணும். ஆலோசனை பண்ணி நிச்சயம் பண்ண வேணுமென்று கேள்விப்பட்டிருக்கிறேன். நம்முடைய குன்னனக் கோனதிரி ராசா அவர்கள், சே(ரு)ரமான் பெருமான் கையிலேயிருந்து கோழிக்கோடு-சுள்ளிக்காடு, இந்தவிரண்டு ஊர்களையும், பள்ளி மாருடி சேருமான் வாள் வாளின் முன் மேல் நீர் இப்படிப்பட்ட விருதுகளையும் ஒற்றைத்தகில், என்று இப்படிச் சொல்லப்பட்ட வாத்தியங்களையும், நீர் என்னைப்போல மேல் விசாரணை பண்ணிக் கொண்டு வர வேணுமென்று வாக்கும் வாங்கி, அடையாளத்தையும் வாங்கி, திருவஞ்சைக்களம் என்கிற விடத்திலேயிருந்து கோழிக்கோட்டு சித்திரக்கூடம் எழுந்தரு ளினர், குன்னனக் கோனதிரி ராசா.

சிறிது நாளிலே, கோழிக்கோட்டு என்கிற ராச்சியத்தைப் பலம்படுத்தியிருக்கிற காலத்திலே, பதினேழுராச்சியம், பதினெட் டுக் கோட்டைப்படி, முந்நூற்றுத் தொண்ணூறு பிரபுக்கள், ஊர்கள், கிராமங்கள், பசு, பிராமணர், நாடு, நகரம், அடியார், குடிபதிகள் இவர்களையும் பரிபாலனம் பண்ணி, மேல் கோயில் ஸமஸ்தானம் நடத்தி, முப்பதினாயிரம் பதினாயிரம் இப்படி நாற் பதினாயிரம் சனங்களுடைய சேவகத்தையும் நடத்தி, ஏறநாடு பெரிம்படைப்பு என்றும், பந்நியூரு, ...............சாவுரம் என்றும் இப்படிச் சொல்லப்பட்ட சத்துருத்துவங்களை முன் நிறுத்திக் கொண்டு பரிபாலனம் பண்ணினர், கோனதிரி ராசா.

கன்னியாகுமரி-கோகர்ணத்துக்குள்ளே கன்னெற்றி புதுப் பட்டணம் மட்டுக்கும் சேரமானுடைய ராச்சியம். நூற்று அறுப தின் காதத்திலே பதினேழு ராச்சியம் என்றும், பதினெட்டுக் கோட்டைப்படி என்றும், முன், பெரியோர்கள் சொல்லிக்

கேள்விப்பட்டிருக்கிறேன். போலநாடு ராச்சியத்திலே எழுபத்திரண்டு ஊர் என்றும், மூன்று கூட்டம் என்றும், ஐந்து கம்படி என்றும், இவைகளெல்லாம் கூடி பதினாயிரம் சனம் என்றும், சொல்லுகிறதனுடைய விவரம்:—இவர்கள் எல்லாரும் ஒரு தாயார் வயிற்றிலேயிருந்து பிறந்து விருத்தியானவர். பின்னையும் ஒரு கூலிச் சேவகம். இவர் ஒருவிடத்திலே சேவகம் செய்கிறவர். ஒரு பாத்திரத்தில் சமைக்கப்பட்ட அன்னம். ஒரு குடையிலே வேலை. ஸ்ரீ பரசுராமன் தேவப்பிராமணரைப் பரிபாலனம் பண்ணுகிறதற்காக மலையாளம் என்கிற பூமியையுண்டு பண்ணி, பிராமணருக்குத் தானம் பண்ணி, வனத்துக்கு எழுந்தருளி, வனவாசம் பண்ணுகிற காலத்திலே, மலையாளத்திலே துஷ்டரும் விர்த்தித்தபடியினாலே, பரசுராமன் சேவை பண்ணினார். அப்போது, பரசுராமர் பிரத்தியட்சமாய் வந்து, பிராமணருடைய சங்கடம் தீர்த்து, சொர்க்கத்துக்கு எழுந்தருளினார் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன்.

பிற்பாடு, அறுபத்துநாலு கிராமத்துப் பிராமணருடைய அனுக்கிரகத்தினாலேயும், சேரமான்பெருமானுடைய ஆக்கினையினாலேயும், பதினேழு ராச்சியங்களையும், பதினெட்டுக் கோட்டைப் படியையும் பரிபாலனம் பண்ணி, முப்பதினாயிரம் பதினாயிரம் இப்படி நாற்பதினாயிரம் சனங்களை மேன்மையாய் வைத்துக் கொண்டு, ரட்சாசிட்சைகளையும் பண்ணி, மலையாளம் நூற்றுஅறுபதின் காதவழி ராச்சியத்திலேயும் மேற்கோயில் சமஸ்தானம் நடத்தி, பரிபாலனம் பண்ணிக்கொண்டு வருகிறார் நம்முடைய குந்நனக் கோனாதிரி மகாராசா.

பூமிகளினுடைய நன்மை தின்மை யறியவேண்டின விவரம்:—ராசிக்கூறு அதமம். பசமக்கூறு உத்தமம். புஞ்சை நிலத்திலேயாகிலும் நஞ்சை நிலத்திலேயாகிலும் அந்தப் பூமியினுடைய நடுவே ஒரு கோல் அகலத்திலே ஒரு கோல் ஆழத்திலே ஒரு பள்ளம் வெட்டி, இரண்டாந்தரம் அந்த மண்ணைத் தானே பள்ளத்திலே போட்டால் பள்ளம் நிரம்பி, மண் மீதியிருந்தால் பசமக்கூறு; உத்தமம். அந்த மண்ணினாலே பள்ளம் நிரம்பாமற் போனால் ராசிக்கூறு, அதமம். மண்ணுஞ் சரியாயிருந்தால் ராசி பசமக்கூறும் கூடினது.

மத்தியம் பூமி ; வீடு கட்டுகிறதற்கு லட்சணம் பார்க்கவேண்டின விவரம் :—முன்னே சொன்னபடிக்குப் பள்ளம் வெட்டி, ராத்திரியிலே போய், ஒரு புதுச்சட்டியிலே நெல்லு நிறைத்து, அந்தப் பள்ளத்திலே வைத்து, அந்த நெல்லுக்கு மேல் ஒரு தேங்காயை உடைத்து வைத்துத் தேங்காய் முறியிலே நெய் விட்டு, நாலு பக்கத்திலேயும் நாலு வத்திகளைப் போட்டு, அந்த இடத்தைவிட்டு வந்துவிடுகிறது. ஒரு சாமத்தின் பிற்பாடு, போய்ப் பார்க்கிறபோது, நாலு பக்கத்தின் வத்திகளும் அணைந்து போனால் யாருக்கும் வீடு கட்டப்படாது, அசுபம். கிழக்கு வத்தி எரிந்து இருந்தால், பிராமணனுக்கு சுபம். தெற்கே வத்தி எரிந்து இருந்தால், க்ஷத்திரியனுக்கு சுபம். மேற்கே வத்தி எரிந்து இருந்தால் வைசியனுக்கு சுபம். வடக்கே வத்தி எரிந்து யிருந்தால் சூத்திரனுக்கு சுபம். இப்படி, வீடு கட்டவேண்டி யிருக்கிறவர்களுக்கு பூமியினுடைய குணத்தையும் தோஷத்தையும் சோதித்து அறியவேண்டியது. பூமியை வாங்குகிறபோதும் விற்கிறபோதும் பூமியினுடைய உத்தமம், மத்திமம், அதமம் இவைகளைத் தெரிந்து செய்யவேண்டியது. பூமியை ஒற்றி வாங்குகிறபோதும், பணயம் எழுதி வைக்கிறபோதும், பணயப்பாடு எழுதிவைக்கிறபோதும் இவ்வளவு பூமிக்கு இவ்வளவு திரவியம் கொடுத்தால் நஷ்டம் வராது என்று நாலு பேருக்குத் தோன்றப் பட்டால் போதும். சார்ந்த சாதிக்காரருக்குக் கடன் கொடுக்கிறபோதும், ஒற்றி, குதுவை இவைகளைக் கொடுக்கிறபோதும், அந்த சார்ந்த சாதிக்காரன் மத்தியஸ்தரான சாட்சி(டி) எழுதி வைத்துக் கொடுத்தாலும் போதும்.

மக்கத்தாயம், மருமக்கத்தாயம் இவைகளினுடைய விவரம் : மக்கத்தாயமாயிருக்கிறவனுக்குக் கடன் கொடுக்கிறபோதும், ஒற்றி, குதுவை யிவைகளுக்குக் கொடுக்கிறபோதும், பூமி முதலானவைகளை வாங்குகிறபோதும், கொடுக்கிறபோதும் தன்னுடைய மகளிர்களிருந்தால், அவர் அறியச் செய்யவேண்டியது. மருமக்கத் தாயமானால் மருமக்கள் அறியவேண்டியது. மக்கத்தாயருக்கு மக்களும், மருமக்கத்தாயக்காரருக்கு மக்களும் இருந்தால் அவர்களும் அறியாமல் கொடுக்கல் வாங்கல் இவைகளைச் செய்யப்படாது. பூர்வீகமான ஆஸ்தியையும், பூமிகளினுடைய எல்லைகளையும் ஒருவரும் நீக்கலாகாது. ஒற்றிக்காரன் நீக்கினால் அவன் அந்தப் பூமிக்காக கொடுத்திருக்கிற பணம் தள்ளுண்டு

போம். ஆனபடியினுலே, எல்லாரும் அதிரும் வரம்புபோட்டு பயிர்போட வேண்டியது.

சென்மிக்கு, குடியானவன் பூமியிலேயிருந்து வருஷா வருஷம் கொடுக்கவேண்டின பாட்டநெல்லும் பாட்டப்பணமும் சென்மிக்குக் கொடாதபடிக்குக் குடியானவன் கிட்டே நிலுவையாயிருந்தால் அது தீர்த்துக் கொடுக்கவேண்டிய விவரம் :—சென்மியிடத்திலேயிருந்து ஒரு குடியானவன் பூமியை வாங்கி ப(யறு)[யிர்]போடுகிறபோது, இவ்வளவுபூமிக்கு இம்மாத்திரம் பாட்டம் என்று திட்டம் பண்ணியிருப்பார். புஞ்சை நிலமானுல் பணம். நஞ்சை நிலமானுல் நெல்லு பாட்டம் கொடுக்கவேண்டியது. குடியானவன் காணத்துக்காகக் கொடுத்து வாங்குகிற போது, சென்மிக்குக் கொடுக்கவேண்டியதிலே, தன்னுடைய திரவியத்தினுடைய வட்டியைத் தள்ளிப்போட்டுக் கிரையம் சென்மிக்குக் கொடுக்கவேண்டியது. சென்மி ஒரு குடியானவனுக்கு ப(யறு)[யிர்] போடுகிறதற்காக ஒரு பூமியைக் கொடுத்திருந்து, அதிலேயிருந்து வருஷம் ஒன்றுக்கு நூறுபாட்டம் வருகிறதற்கும், மற்றொருவன் காணம் கொடுத்து வாங்கி, அவனுடைய அர்த்த பலியைத் தள்ளிப் போடுகிறபோது, சென்மிக்குச் சேரவேண்டின புறப்பாடு பாட்டம் கொஞ்சமாய், ஒரு பறையில் குறைந்த நெல் ஆகிலும், ஒரு பணத்தில் குறைந்த பணம் ஆகிலுமாய் அது கொடாமல் நிலுவையாய்ப்போனுல் அதற்கு வருஷா வருஷம் பாட்டமும் வட்டியும் வட்டிக்கு வட்டியும் கூடி நின்ற நாள்வரைக்கும் கணக்குப் பார்த்துத் தீர்த்துக் கொடுக்கவேண்டியது. அதற்கு பேரு-ஊளுள்-பலிச-குடியானவனுடைய அர்த்த பலிசு. அதிகமாய்ச் சென்மிக்குச் சேரவேண்டிய பாட்டம் குறைச்சலாய் அது நிலுவையாய்ப் போனுல், அந்த மிச்சாரத்தை யிரட்டித்துக் கொடுக்கவேண்டியது. பாட்டநெல்லு அதிகமாய், அர்த்தபலிசு குறைச்சலாய், அந்த நெல்லு நிலுவையாய்ப் போனுல், அதற்கு வருஷா வருஷம் வட்டி கூட்டி, தீர்த்துக் கொடுக்க வேண்டியது.

மேலாழி என்கிறதனுடைய விவரம் :—பிரம்மச்சுவம், தேவச்சுவம் பூமிகளை யாராகிலும் விலைக்கு வாங்குகிற சமயத்திலே, தானே கொஞ்சமாய் ஒரு மிச்சாரம் வருஷா வருஷம் அவருக்குக் கொடுக்கும்படி காறு பண்ணுவார். அந்த மிச்சாரத்துக்குப் பேரு மேலாழி.

பின்னையும் குடிகள் சிறிது சென்மிகளுக்கு வருஷம் நெய், பாத்திரத்துடனே கொண்டு போய் கொடுக்கிற வழக்கம் இருக்கிறது. அதற்குப் பேர் நெய். இவைகள் நிலுவையாய்ப் போனாலும், பன்னிரண்டு வருஷத்தினது தீர்த்துக் கொடுக்க வேண்டியது. ஒருவருஷம் நின்றாலும் நூறு வருஷம் நின்றாலும் பன்னிரண்டு வருஷத்தியதுதான். திரவியத்தை யாராகிலும் கடன் கொடுத்து, அதனுடைய வட்டி விர்த்தித்து இரட்டித்துப் போனால், அது இரட்டியாகாது. கடன் வாங்கினவனுக்கு அந்தத் திரவியத்தைத் திருப்பிக் கொடுக்கிறதற்கு நிர்வாகம் இல்லாமல் போனால், முதலும் வட்டியும் சேர்த்து எழுதி வைக்க வேண்டியது. ராசா ஸ்திரீகள், சத்துருக்கள், சடர், குரு சனங்கள், கச்சோடக்காரர், பரதேசிகள், சேரமக்கள், புத்தன், மடீச்சீலக்காரர் இவர்களுடனே கடன் வாங்கலகாது. நீருயிருக்கிறவனுக்கும் நேருயிருக்கிறவனுக்கும் கடன் கொடுத்தால் அந்தத் திரவியம் திரும்பிவந்து சேரும். நீரும் நேரும் இல்லாத சனங்களுக்குப் பணயப்பாடு இல்லாமல் கொடுக்கப்படாது. கடன் கொடுக்கிற போது, குதுவை வாங்குகிறது, ஈடு உள்ளது வாங்கவேணும். கேடு உள்ளது வாங்கலாகாது. கோடாலி, காலி, காணம், அச்சுவம், ஆனே, பட்டு, புடவை இவைகளைப் பணயம் வாங்கி வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படாது. தூரஸ்தன், நிர்த்தனன், துஷ்டன், கலன், காமுகன், அவசன், தீர்க்கசூத்திரன், ராசா, லோகர், பிராமணர் யோகம், தேசவழி, மத்தன், உன்மத்தன், பாலன், ஸ்திரீகள், இல்வழிக்கார், சங்காதிகள், ஏணங்கள், பந்துக்கள், சனங்கள் இவர்களுக்குக் கடன்கொடுத்தால் அகப்படாது. இவர்களல்லாமல் நல்ல சனங்களுக்குக் கொடுத்து, வட்டி தேகவுரவரைக்கும் நின்று, வருஷம் ஒன்றுக்கு வட்டியும் முதலும் வாங்கிக்கொள்ள வேண்டியது. கடன் வாங்கினவனுடைய நிர்வாகம் பார்த்து, முதல் வருகிறது நாள் தாமதமாய்ப்போனால் வட்டி வாங்கி முதல் நிறுத்துகிறது. அவன் வட்டி கொடுக்கிறதற்குத் தடங்கல் வருகிற நாளையிலே, முதல் வாங்கிப் போடவேண்டியது. பணயம் வைத்தால் எல்லாருக்கும் கொடுக்கலாம். வராததையும் அந்தப் பணயம் அழைப்பிக்கும். பணயம் வைத்து வாங்குகிறபோது, கொடுக்கிறதும் அல்லாமல், இரண்டாந்தரம் அந்தப் பணயம் வாங்கி, அந்தக் கடன் கேட்டால் கொடுக்கலாகாது. பணயம், பேரு குறை

விலையிலே அதிகம் குறையக் கொடுத்தாலும், கெடுவு தப்பிப் போனல் பணயத்தினுடைய சம்பந்தமில்லாமல் வேறே யொன்றுமில்லை. முன்னே கடன் வாங்கிப் பத்திரம் எழுதிக் கொடுத்தவன், இரண்டாந்தாரம் கடன் வாங்கினல், பத்திரம் எழுதுகிறபோது எழுதின பத்திரத்தின் பிறகே கண்டு கண்டு எழுத வேண்டியது. இல்லா விட்டால் பலன் பெருது.

கணபதியையும், சரசுவதியையும், கிருஷ்ணனையும், ஸ்ரீ பார்வதியையும், ஸ்ரீ பத்திரகாளியையும், ஐயப்பன் ஆறுமுகன் என்றிப்படி யுள்ளவரையும் நமஸ்கரித்து, என் குருவையும் வணங்கிக்கொண்டு, அதனுடைய விவரத்தைத் தெரியப்படுத்து கிறதற்கு ஆரம்பிக்கிறேன் :—

கிருத, திரேத, துவாபர, கலி என்றிப்படிச் சொல்லப்பட்ட நாலு யுங்களிலே, அநேகம் அநேகம் ராசாக்கள் பூமியைச் செவ் வையாய் ஆண்டு ரட்சித்ததினிலிரகு க்ஷத்திரிய குலத்தினில் துஷ்ட ராசாக்களா யுண்டானவரை நாசம் பண்ணுகிறதற்காக ஸ்ரீ பரசுராமனவதரித்தார். ஆனல், பரசுராமன் இருபத்தொரு தரம் முடி க்ஷத்திரியரைக் கொன்ற வீர அத்தியாதி தோஷத்தை நிவாரணம் பண்ணவேணுமென்று எண்ணிக் கொண்டு, கர்மம் பண்ணுகிறதற்காகக் கோகர்ணம் பிரவேசித் தார். கல்மலைமேல் இருந்து கொண்டு, வருணனை சேர்வை பண்ணி, பூமிதேவியை வந்தனம்பண்ணி, சமுத்திரத்தை ஒத்தப் பண்ணி, நூற்றுப்பதின் காதம் பூமியை உண்டாக்கினர். மலையாளம் பூமிக்கு ரட்சை வேணுமென்று எண்ணிக்கொண்டு, நூற்றெட்டு ஈசுவரப்பிரதிஷ்டை செய்தும், பூமியின் நடுக்கம் விடவில்லை யென்று கண்டு, அதன்பிறகு ஸ்ரீ பரசுராமன், கேளரத்தில் பிராமணரை உண்டாக்கவேணுமென்று எண்ணிக் கொண்டு, அநேகம் திக்கிலேயிருந்து அநேகம் பிராமணரைக் கொண்டுவந்து கேரளத்தினில் வைத்தார். அதன்பிறகு அவரொருவரும் நிலைமையாயில்லாமல் தம்முடைய தம்முடைய திக்குக்குத்தானே போய்விட்டார்கள். அதற்குக் காரணம், கேரளத்தினில் சர்ப்பங்கள் வந்து நீங்காமல் போயின. அவருடைய உபத்திரவத்தினலே ஒருவருக்கும் நிலைமையா யிருக்கக் கூடாமலாயிற்று. அதன்பிறகு ஸ்ரீ பரசுரமன் ஆலோசனை பண்ணி, உத்கர பூமியிலிருந்து ஆரியப்

பிராமணரைக் கொண்டு வந்து வைத்தார். முன்னே ஆரியப் பிராமணர் ஆகிச் சத்தரமென்கிற திக்கிலிருந்து புறப்பட்டு, சமந்தபஞ்சகமென்கிற க்ஷேத்திரத்திலிருந்தார். அந்த க்ஷேத்திரத்துக்குக் குருக்ஷேத்திரமென்று பேருண்டு. அங்கேயிருந்து பரசுராமர் அறுபத்து நாலு கிராமத்தைப் பயணப்படுத்திக் கொண்டு வந்து, பரதேசத்தில் வைத்துக்கொண்டு, அங்கேயிருந்து ஒவ்வொரு அகரங்களும் கிராமங்களும் கொடுக்கிறேன் என்றும் சொல்லி, அவரைக் கொண்டுவந்து கோகர்ணத்திலே முன் குடுமி வைத்தார். பூர்வசிகை பரதேசத்திலே ஈனமென்றும், முன்குடுமி வைத்ததன்பிறகு அங்கேபோனல் சுசாதிக்காரர் சேர்க்க மாட்டாரென்றும் எண்ணிக்கொண்டு, முன்குடுமி வைத்தார். அதன்பிறகு அறுபத்து நாலுக்கும் பூவும் நீரும் கூடி, பிராமண க்ஷேத்திரமாய் நீங்கள் அனுபோகம் பண்ணிக் கொள்ளுங்கோளென்று சொல்லிக்கொடுத்தார். அதன்பிறகு நாற்பத்தீரடி ஸ்தானமுண்டாக்கினர். கனகப்பொடியை யிறைத்தார். ராசிப் பணம் அடிப்பித்தார். இப்படிப் பூமியின் நடுக்கம் நிறுத்தினர். அதன்பிறகு உங்களுக்கு ஆயுதப் பிரயோகம் வேணுமல்லவா என்றும், அதற்கு நீங்கள் என்னிடத்திலிருந்து ஆயுதம் வாங்கிக்கொள்ள வேணுமென்றும், ஸ்ரீ பரசுராமன் அறுபத்துநாலு கிராமக்காரருடனே அருளிச்செய்தார். அதன்பிறகு பரத்துவாச கோத்திரத்திலுள்ளவர் ராமனிடத்திலிருந்து ஆயுதம் வாங்கினர்.

பரத்துவாச கோத்திரத்தினிலுள்ளவர் கை நீட்டி வாங்கின காரணமாய், வாழையூர் ஒருவனைக் கொல்லுகிறதற்கு ஒருவரையும் சம்மதி பண்ண வேண்டியதில்லையென்று சொல்லுகிறதற்கு, தபசினுடைய சக்தி வேணுமென்று சிறிதுபேர் நினைத்திருக்கிறார். சஸ்தரப் பிச்சையைத் தங்களுடைய கோத்திரம் வாங்கினபடியினலே வாள் நம்பியானர். தங்கள் கையில் வாள் உண்டான காரணத்தினலேயும், பிற்பாடு ஸ்ரீ பரசுராமன் இப்படி உத்தரவு பண்ணினபிறகு அறுபத்து நாலு கிராமத்தையும் அழைப்பித்து, முன்னே உபத்திரவம்பண்ணின சர்ப்பங்களுக்கு பிரம்ம சோத்திலேயிருந்து எல்லாவிடத்திலேயும் ஒவ்வோர்பங்கு கொடுக்க வேணுமென்றும், அவர் ஸ்தான தெய்வமாயிருந்து உங்களை ரட்சிக்க வேணுமென்றும் உத்தரவு பண்ணினர். அவர் பிரம்ம சொத்திலே யிருந்து ஒவ்வோரோர்பங்கு எல்லா

ருக்கும் உத்தரவுபண்ணினர். அவரைச் சந்தோஷம் பண்ணி வைத்து, அவரும் ஸ்தான தெய்வமாயிருந்ததன் பிறகு, கேரளத்தில் சர்ப்பத்தின் உபத்திரவம் போயிற்று. அதன்பிறகு மலையாளத்தில் நாற்பத்திரடி ஸ்தானம் உண்டாக்கினர். அதில் அநேகம் களரிபாதமாரையும் குடி வைத்தார். அங்கே தீபமும் பூசையும் நடப்பித்தார். சமுத்திரதீர்த்தத்தினில் நூற்றெட்டுத் துர்க்கா தேவியையும் குடி வைத்தார். நாகமும் பூதமும் பிரதிஷ்டித்தார். கனகப்பொடியிறைத்தார் என்றும், அதைப் புதையல் வைத்தாரென்றும், இப்படிப் பூமியின் நடுக்கம் நிறுத்தினரென்றும், மலையாளத்தினில் ஆரியப் பிராமணர் முதல் நிலைமையாயிருந்தாரென்றும் கேள்விப்பட்டு, பின், போய்விட்ட சனங்களும் வந்தார். அவரையும் பழம் துளுவரென்று சொல்லுகிறார். அநேகம் திக்கிலிருந்து வந்தவரானபடியினலே, ஒவ்வொரு பாஷையாய்ப் போயிற்று. அதன்பிறகு, ஸ்ரீபரசுராமன் அறுபத்துநாலு கிராமத்தையும் அழைப்பித்து வெள்ளப்பநாட்டுக்கரை கொண்டு வந்து வைத்தார். பிற்பாடு, இரண்டாந்தரம் வந்த சனங்களில் சிறிது பேருக்கு தந்திர விருத்தி கொடுத்தார். அறுபத்து நாலு கிராமத்தினிலுள்ள இரிங்காணிக்குடை கிராமத்திலே தரண நெல்லூராருக்கு கைவட்டகைக் கொடுத்தார். தொடர்ந்து, பின்னே சிறிதுபேருக்குப் புராண விர்த்தி கொடுத்தார். தந்திர விர்த்தி அறுபத்துநாலு கிராமத்துக்குமில்லை. முன் பிராமணருக்கு ஒன்ருக புஷ்பமும் நீரும் கொடுத்து, ராசாங்கசம் இரண்டாந்தரம் வந்தவருக்கு அனுபோகத்துக்குக் கொடுத்தது சென்மமென்று சொல்லுகிறார்.

அப்படிக் கொடுத்தது, ஒவ்வொரோர் கிராமத்திலுள்ள பெரிய வீட்டுக்காரருக்கு ஒன்ருய்க் கொடுத்தது ஏகோதகம். ஏகோதகம் கொடுத்தது கிராமங்களுக்கு என்னுடைய சென்மமென்று விரலமுக்குமளவில் அவர் தம்மிலமுக்கும்போது மூக்கு அனுபோகத்துக்கு மாத்திரம் தான். மற்றக் கிராமங்களுக்கு என்னுடைய சென்மமென்று பிரத்தியேகம் செய்யலாம். இதனில் ஏகோதகம் கொஞ்சம் இது அறியாமல் சென்மத்துக்கு விரலமுக்கினல் சரிப்பட்டுவராது. கிராமங்களில் இந்தத் தாரணமும் கொஞ்சம் ஸ்மார்த்தருக்கு விசாரணையும் குறையும்.

பிற்பாடு ஸ்ரீ பரசுராமன், தன் வீர அத்தியாதோஷத்தை ராமனட்டுக்கரையுள்ளவருக்குத் தானம்பண்ணி, அவருக்கு

மெத்(ன)த ஆஸ்தியும் கொடுத்தார். அவருக்கு ஊரிலே பரிக்ஷை என்று பேரும் கொடுத்தார். அதன்பிறகு எல்லாரும் தம் முடைய தம்முடைய திக்கில் போயிருந்தார். ஒரு கிராமத் துக்கும் வெள்ளப்ப நாட்டுக்கரையில் வஸ்துவும் வீடும் இல்லாமல் இல்லே. இப்படிக்கு ஸ்ரீ பரசுராமன், கேரளபூமியை உண்டு பண்ணி, அறுபத்துநாலு கிராமத்தில் பிராமணருக்கு உதக தானம் பண்ணி, தேவேந்திரனே (அல்லது பரமேல்பிச்சு) ஏற்படுத்தி, ஸ்ரீ பரசுராமன் தபம் பண்ணுகிறதற்காக வனத் துக்கு எழுந்தருளினூர். ஆனல் கேரளத்திலிருக்கிற சனங்கள் தேவலோகத்திலிருக்கின்றவர்களுக்குச் சரியாயிருக்க வேணு மென்றும், தேவலோகத்துக்குச் சரியாயிருக்கவேணுமென்றும் நினைத்துக்கொண்டு, ஸ்ரீபரசுராமன் தேவேந்திரனே யேற்படுத்தி னூர். ஆறுமாதம் வருஷம் வேணும். ராச்சியத்தினிலனேகம் பலமூலாதிகளுண்டாகவேணும். அன்னமும் புஷ்பமும் நீரும் செம்மையா யுண்டாகவேணும். தர்ம விருத்தியாகவேணும். ஐசுவரியமுண்டாய், அதனல் ஈச்சுர சேவை செய்யவேணும். பசுக்களும் மெத்த உண்டாகவேணும். அவைகளுக்குப் புல்லும் செல்வமும் மெத்த வுண்டாயிருக்கவேணும் என்று எண்ணிக் கொண்டு, தேவேந்திரனே ஏற்படுத்தினபடியினலே, ஆறு மாதம் வருஷிக்கிறது. பிற்பாடு ஆறு மாதம் வேனல் அல்லது வெயில் காலமும் உத்தரவுபண்ணி யிருக்கிருர். தெய்வலோகங்களும், தெய்வத்தின் காவுகளும், ஐயப்பன் காவுகளும், பத்திரகாளி வட்டம், கணபதிகாவு இப்படிச் சொல்லப்பட்ட ஸ்தலங்களில் வீட்டும் பாட்டும் நடப்பிக்கிறதற்கும், உற்சவம், வேலே, விளக்கு தீயாட்டு, பரணி வேலே, ஆருடு, களியாட்டம், பூரம்வேலே, தெய்வமாட்டம், தண்ணீராமுறது, தாலப்போலி, வையா விசாகம், மாமாகவேலே என்றிப்படிச் சொல்லப்பட்ட உற்சவங் களே நடப்பிக்கிறதற்காக, ஆறு மாதம் வெயிற்காலம் வெளிவு உத்தரவு பண்ணியிருக்கிருர். ஸ்ரீ பரசுராமனல் உண்டாக்கப் பட்ட பூமியினில், பூதேவன்மார், பிராமணர், அருணேதயத் துக்கு ஸ்நானம் பண்ணி, சேவையாயிருந்துகொண்டு, தாங்களுக் குள்ள சற்கர்மங்களேப்பண்ணி, க்ஷேத்திரங்களிலேயும் காவு களிலேயும் பூசையும் ஸ்ரீ பூதபலியும் நடப்பித்து, மற்றும் மகா லோகர் அல்லது மகாசனங்களுக்கு வரப்பட்ட அல்லல் அல்லது துக்கமும் மகாவியாதிகளும் தீர்க்கிறதற்காகப் பண்ணிவைக் கின்ற ஈச்சுர சேவைகள், ஓமத்தியானம், பகவதிசேவை,

புஷ்பாஞ்சலி, அந்தி நமஸ்காரம், திரிகால பூசை, கணபதி ஓமம், மிருத்தியுஞ்சய செபம், மூன்றுலெக்க சகஸ்திரநாமம், தானளுந் தர சகஸ்திர போசனம், மகாமிருத்தியுஞ்சய செபம் என்றிப்படிச் சொல்லப்பட்ட ஈச்சுர சேவைகளையும் நடப்பித்து, தாங்கள் செய்கின்ற கர்மங்களுக்கு விகாதம் வராமல் செவ்வையாய் நடப்பித்துக்கொள்ளுகிறதற்கு தேவப் பிராமணர் அர்த்தப் பிராமணரிடத்திலிருந்து பூமி வாங்கினர். அதனாலே ஒவ்வொரு தேசமாக்கி, அந்த தேசத்துக்கு ஒவ்வொரு பேரும்போட்டு, ஒவவொரு க்ஷேத்திரம் கட்டுவித்து, தங்களுடைய தேசத்திலே ஊர்ப்பள்ளியிவற்றைக் குடிவைத்து, அங்கே நடப்பிக்க வேண்டின பிரதிஷ்டைபண்ணி, பிம்பம் அல்லது விக்கிரகத்தினில் பூசையும் விளக்கும் நடப்பித்து, நிர்மாலேசாற்றி, தங்களுடைய வீட்டினில் ஸ்தான தெய்வத்தையும் தரும தெய்வத்தையும் ஸ்தல பரதேவதையையும் குடிவைத்து, அவருக்கு வேண்டின பூசைகளையும் நடப்பித்து, தங்களுடைய தேசத்தில் ஊர்ப்பள்ளி தெய்வத்தைக் குடிவைத்து, அங்கே நடப்பிக்கவேண்டின வேலேயும் அல்லது திருநாளும் விளக்கும் ஊ(வீ)ட்டும் அல்லது போசனம்பண்ணி வைக்கிறதும், திரையும் அல்லது அந்த தைவத்தின் வேஷம்போடடு ஆடுகிறதும் நடப்பித்து, தேசத் திலே அடிமையும் அல்லது முறியும், குடிமை அல்லது குடிகளை யும் உண்டாக்கி, அடியாரையும் குடியாரையும் பரிபாலனம் பண்ணி, தரையும் தரவாட்டுக்கா[ர]ரையும் ஊரும் பெரிய வீட்டுக்காரரையும் நிர்ணயம்பண்ணி, அவராலே ஓவ்வொரு கண்ணும் கையும் கற்பனையும் அல்லது உத்தரவும் அவகாச மும், தாழசையும், வீழசையும் வராதே அல்லது தாழ்த்தியும் தடங்கலும் வராமல் ரட்சித்து, பரிபாலனம்பண்ணி, குடியாருக் குக் கீழாயிக்கூறும் அல்லது தாழ்மையும், தங்களுக்கு மேலாழிக்கூறும் அல்லது மேன்மையும், குடியாருக்குக்கரண மும் தங்களுக்கு சென்மமும் என்று நிர்ணயம்பண்ணி, கரண சென்ம மரியாதையும் நடப்பித்து, ஊரினில் கிராமங்களிலுள்ள பிராமணருடைய கர்மமான தேவபூசையும் நடப்பித்து, அறுபத்துநாலு கிராமத்தினிலுள்ள பிராமணரோடும் கூடி யிருக்கிறார். அர்த்தப்பிராமணர் ஸ்ரீ பரசுராமனிடத்திலிருந்து பூமி வாங்கினபடியினலே, பாதி பிராம்மணியம் குறைந்துபோன படியினல் அர்த்தப்பிராமணர் என்று சொல்லுகிறார். தேவப் பிராமணரென்று சொல்லுகிறதற்குக் காரணம்:—நாலு வேத

மும் ஆறு சாஸ்திரமும் ஆக்கும் அவைகளே நடத்துகிறபடி யினலே தேவப்பிராமணரென்று சொல்லுகிறார். வாள்நம்பி யென்றும் பட்டிணிநம்பியென்றும் சொல்லுகிறவர், அர்த்தப் பிராமணர். ஆயுதபாணிகள் ஆயுதம் தரித்துக்கொண்டு பாடு நடக்கையும், தண்டுகிறதும், படைகூடுகையும், சண்டை பண்ணு கிறதும், ராசாக்களுடைய முன்னே அகம்பிடி ஆடலி நடக்கிற தும் செய்கிறபடியினலே வாள்நம்பி என்று பேராச்சுது. பட்டிணிநம்பிக்கு சங்கும் குடையுமல்லாமல் மற்றொரு ஆயுதமு மாகாது. கொன்றாலும், நச்சைக் காட்டினாலும் சங்கும் ஊதி பட்டினி இருக்கை மாத்திரம்தான். ஆனபடியினலே பட்டிணி நம்பியென்று சொல்லுகிறதற்குக் காரணம்.

இப்படி, அறுபத்துநாலு கிராமமும், இருபத்தொரு தேசமு முண்டாயிருக்கிற காலத்தினில், அறுபத்துநாலு கிராமமும்கூடி சிக்காரெக்கைபண்ணி ரட்சிக்கிறதற்கு, மூவாண்டைக்கு மூவாண்டைக்கு மூன்று மூன்று வருஷம் ஒவ்வொருத்தன் ரட்சிக்கிறது என்று நிச்சயம் பண்ணினர். நாலு கழகம், நாலு சபை, புள்ளிவூரும், மறவூரும், செங்கள்ளியூரும், பெருஞ்செல்லூ ரும் இப்படி நாலு நேமிக்கிறதுக்கு நாலு கழகமும் சேர்ந்தால் போதுமென்றும் நிச்சயம் பண்ணினர். அதில் செங்கள்ளியூர்க் கழகம் சபை அறுபத்துநாலிலே சேர்ந்ததல்ல என்று சிறிது பேர் சொல்லுகிறார். அப்படிச் சொல்லுகிறவர் செம்மையாய் அறிந்ததில்லை. அப்படிச் சொல்லுகிறதற்குக் காரணம், செங்கள்ளியூர்க் கிராமத்திலுள்ளவர் எல்லாரும்கூடி, அறுபத்து நாலுக்கும்கூடி, க்ஷேத்திர சம்பந்தம், ஏவல் அதிகாரத்தைக் கொடுத்ததன்பிறகு அங்கே தமிழர் வந்து சேர்ந்தார். வந்த தமிழரும் அங்கேயுள்ள பிராமணரும்கூடி, ஒரு பிணத்தைத் தகனம் பண்ணுகிற நிமித்தமாய் சண்டைபோட்டு, அதன் பிறகு, தமிழர் எல்லாரும்கூடி ஆலோசனை பண்ணி, அங்கே யுள்ள (அங்கேயுள்ள) சனங்களையும் க்ஷேத்திர சம்பந்தம் கொடுத்தவரையும் கூட்டி அழைத்துக்கொண்டுபோய், ஆற்றி லிழுத்துப்போட்டார் செங்கள்ளியூர்க் கிராமக்காரர். ஆனபடி யினலே, அவர் அறுபத்துநாலு கிராமத்தில் சேர்ந்தவரல்லர் என்று சிறிதுபேர் சொல்லுகிறார்.

அவரெப்படித் தமிழரானரென்றும், அவருடைய உண்மை யெப்படி யென்றும், அவருக்குப் பிரம்மஅத்தியுண்டான

தெப்படிப் போயிற்றென்றும், ஈச்சுரன்மாத்திரம் அறிவார். விசேஷமாய்ச் சொன்ன நாலு கழத்தில் அல்லது சபையில், இரிங்காணிக்குடைப் பிராமணக் கழகம் அல்லது பிராமணசபை, மூழிக்குளம் க்ஷத்திரியக் கழகம் அல்லது க்ஷத்திரிய சபை, பறவூர் வைசியக் கழகம் அல்லது வை(ச்)சிய சபை, அயிராணிக் குளம் சூத்திரக் கழகம் நாலு அல்லது வர்ணச்சபை 4.

இனி, அவரோதக் கழகம். நாலு நிச்சித சபை 4. பெருஞ் செல்லூர் பன்னியூர் இரிங்காணிக்குடைக் கிராமம், மூழிக் குளம் கிராமம், அயிராணிக்குளம் கிராமத்தையும் நித்திய விசாரணைக்காக ஏற்படுத்தினர். ஆனபடியினலே நாலு கிராமத்துக்கும் கொடுங்கல்லூரிலே தனிவீடு உண்டாக்கினர் பறவூர் கிராமத்தில், யௌக திருத்தி கடம்பனுட்டு இரண்டில், ஒரு வீட்டிலிருந்து ஒருவனை நெடிய தளியில் வைத்து அல்லது பெரிய தளியில் வைத்துக்கொண்டு, தளியாதிரியாய் வாழிக்க வேணும். அயிராணிக்குளம் கிராமத்தில், கரிங்கம் பள்ளி செறுவுள்ளி யிரண்டி லொருவரைக் கீழ்த்தளியில் வைத்துக் கீழ்த்தளியாதிரியாய் வாழிக்க வேணும். இந்த ஸ்தானத்துக் குக் கிரகஸ்த(ரே)[ரை] நிச்சயம் பண்ணுவதில்லை. சென்மம் கழிவோளம் இறந்து போகிறவரைக்கும் நிச்சயிக் கலாம். இந்த நாலு தளியாதிரிமாரும் கூடி ஒன்ருயிருந்து கொண்டு, சிட்சாரட்சை பண்ண வேணுமென்று அறு பத்துநாலு கிராமமும் கூடி உத்தரவு பண்ணினர். அறுபத்து நாலு கிராமத்தில் பத்தரைகிராம கிராம விருத்தி ரட்சிக்கிற தற்காக சத்தியம் பண்ணி, ஆயுத மெடுத்தார். ஆனபடியினலே பத்தரையும் கழகத்திலுள்ளவர் அல்லது சபையார் என்று சொல்லுகிருர். பறவூர், மூழிக்குளம் அயிராணிக்குளம், உளிய னூர், செங்கனுட, தழுவனுட, ஆடைஆர், இரிங்காணிக்குடை, ஆலத்தூர், ஏத்துமானூர், செம்முண்டையில் அரையிப்படி, பத்தரை கிராமம் ஏதாக்கிரமானது, செங்கனுடு பறவூருக்கும் கீழ், உளியனூர் அயிராணிக்குளத்துக்குக் கீழ், அடவூர்க் கழகமும், கீழடமும், தாங்கள் வெளியே வருகிறபோது, ஸ்நானம் சரியாய் நியாயம் சொன்னர். சமயம் அல்லது சத்தி யம் பண்ணி ஆயுதம் எடுக்கிறபோது, பத்துவிடத்திலிருந்து சத்தியம் பண்ணினர். கோகர்ணத்திலிருந்தும், திருச்சிவப் பேருரிலிருந்தும், திருநாவாயையிலிருந்தும், திருக்கனுவாயை யிலிருந்தும், திருக்காரியூரிலிருந்தும், மண்ணத்தூரவிஞ்சிக்க

விருந்தும், கூடல்மாணிக்கத் தின்றேநடையிலிருந்தும் திருவஞ்சைக்குளத்திலிருந்தும், திருவைராணிக்குளத்திலிருந்தும், வெள்ளப்ப நாட்டுக் கரை திருவாலத்தூரிலிருந்தும் இப்படிக்கு பத்துவிடத்திலிருந்து சத்தியம் பண்ணி ஆயுதமெடுத்தார். சமயாசாரமாய்க் கர்மம் பண்ணுகிறதற்கு, அறுபத்துநாலு கிராமமும் கூடி, இந்தப் பத்துவிடத்திலிருந்து சமயம் பண்ணினர்; அல்லது சத்தியம் பண்ணினர். கோகர்ணம், திருச்சிவப்பேரூர், திருநாவாயை, திருக்கணக்காரியூரும், மண்ணம், மாணிக்கம், மஞ்சக்குளம், அயிராணிக்குளம், வெள்ளப்பநாடு இந்தப் பத்துவிடத்திலிருந்து சத்தியம் பண்ணினர். உடனே பூசுரன்மார் பிராமணர் கர்மம் செய்கிறதற்கும், விருத்தி ரட்சிக்கிறதற்கும் ஸ்ரீ பரசுராமனுண்டாக்கின மலையாளத்தில், நாலு கண்ணமுண்டு. கோகர்ணத்துக்குத் தெற்கு, துளுநாட்டில் பெரிம்புழைக்கு வடக்குத் துளுநாடு என்று பேர். துளுநாட்டுப் பெரிம்புழைக்குத் தெற்கு, புதுப்பட்டணத்துக்கு வடக்கு, கூவராச்சியம் என்று பேர். புதுப்பட்டணத்துக்குத் தெற்கு, கன்னெற்றிக்கு [கன்னடத்துக்கு] வடக்கு, கேரளமென்றுபேர். கன்னெற்றிக்குத் தெற்கு, கன்னியாகுமரிக்கு வடக்கு மூஷிக ராச்சியமென்று பேர்.

ஸ்ரீபரசுராமன், வீர அத்தியாதி தோஷம் போகிறதற்காக, நாலு கன்னடத்திலும் அநேகம் பிராமணரைக்கொண்டு வந்து வைத்து, பிரம்மசொத்து உண்டுபண்ணினர். அவருக்குச் சர்ப்பத்தின் உபத்திரவத்தினலே ஓடிப்போய் விடுவாரென்று நினைத்து, பரசுராமன் மனத்தில் மெத்த அதிகம் துக்கத்துடனே, அனந்தன் முதலான மகா நாகங்களைக் கூப்பிட்டு, நான் மெத்தப் பிரயாசைப்பட்டழைப்பித்த பிராமணரை நீங்கள் உபத்திரவம் பண்ணலாகாதென்று ஒவ்வொருதாவில் ஒவ்வொருபக்கத்திலிருந்துகொண்டு, நீங்கள் பிராமணருடைய சந்ததியும் தரவாடும் அல்லது வீடும் ரட்சிக்க வேணுமென்றும், உங்களை அவரும் ரட்சிப்பாரென்றும் சொல்லி, அவருடைய சம்மதம் வாங்கி, நாலுவர்ணத்திலும் பிரம்மச்சுவத்திலும் அவருக்குப் பங்கும் உத்தரவு பண்ணியிருக்கிற நாளையிலே, ஆரியா வர்த்தத்திலுள்ள ஆரியக் கரையிலுள்ள பிராமணர் குருக்ஷேத்திரத்தினில் யோகம் சேர்ந்திருக்கிறரென்று ஸ்ரீ பரசுராமன் கேட்டு, பகவான் எழுந்தருளி அங்கேயிருந்த பிராமணரை வந்தனம் பண்ணி சொன்ன விவரம்:—நான் உங்களுக்குத் தானம்

பண்ணுகிறதற்காக, கேரளமுண்டு பண்ணினேன். நீங்களங்கே வந்திருந்து, ஒவ்வொரு சற்கர்மங்களைச் செய்து, அதனாலெனக்கு மோட்சம் லபிக்கவேணுமென்று ஆசையுண்டென்று சொன்னார். அந்த வேளையில் அறுபத்து நாலு கிராமமும் யோகம் சேர்ந்திருக்கிறார். அறுபத்துநாலும் கூடிப் பதினாலு கோத்திரமுண்டு. மூன்று வேதமுண்டு. அவர் எல்லாரையும் மலையாளத்தினில் கொண்டுவந்து, பூமியை பிரம்மச்சுவமாய்த் தானம்செய்தார். அதன்பிறகு சர்ப்பத்துக்காகத் தீபமும் கொடுத்தார். இரண்டாந்தரம் நினைக்கிறபோது, வீர அத்தியாதி தோஷம் போகவில்லையென்று சந்தேகப்பட்டு, இதில் சிறிது பிராமணருக்கு இந்த வாக்குமூலம் தானே சொல்லி, ஒரு பக்கம் பிரம்மச்சுவமாய்த் தானம் பண்ணினார். அந்தத் தோஷத்தை யேற்றபடியினாலே அவரும் ஊரிலே பரீட்சையானார். அவருக்கும் மற்றுமுண்டானவருக்கும் தாங்களில் தாயாதி கர்மம் செய்வதில்லை. அறுபத்து நாலு கிராமமும் கூடி ஆலோசனை பண்ணின பிரகாரம்........... இந்த ராச்சியத்தை நாம் ரட்சித்துக் கொள்ளுகிறதற்கு யென்...........று உபாய மென்றும் நினைத்துக்கொண்டு, அறுபத்து நாலு கிராமத்தாரும் கூடி இதில் ஒருவரைத்தானே ரட்சாபுருஷனாய், அவரை...............ச் சயம் பண்ணவேணுமென்று நிச்சயம் பண்ணினார். நிச்சயித்தவர் மூன்று வருஷம் மட்டுக்கும் திருவஞ்சைக் குளத்தி லிருந்துகொண்டு, அறுபத்துநாலு கிராமத்தையும் ரட்சித்துக்கொள்ள வேணுமென்றும் உத்தரவு பண்ணினார். மூன்று வருஷம் செல்லுகிறபோது, அறுபத்து நாலு கிராமமும் கூடி, திருவஞ்சைக் களத்தில் யோகம் சேர்ந்து கொண்டு, மூன்று வருஷம் மட்டுக்கும் மற்றும் வேறேயோராளை நிச்சயம் பண்ண வேணுமென்றும் உத்தரவு பண்ணினார். இப்படி அநேக காலம் சென்ற போது, அவருக்குச் சிக்காரெக்கைக்கு நிசமில்லாதபடியினாலே, அறுபத்து நாலு கிராமமும் கூடி உத்தரவு பண்ணினார். பெருஞ்செல்லூர், பன்னியூர், பறவூர், செங்கன்னியூரிலிருந்தும் ஒவ்வொரு ஆளைக் கூட்டிச் சேர்த்துக் காரியங்கள் நடக்கவேணுமென்று உத்தரவு பண்ணினார். பின்னையும் நாலிலிருந்து மொவ்வொருத்தரை அவரோதித்தார்; நேமித்தார். அவருக்கு அவரோத நம்பியென்று பேர். மூன்று வருஷமானால் அவரையும் மாற்றி நேமிக்க வேணுமென்றும் உத்தரவு பண்ணினார். கிரகஸ்தன்மாரை நேமிக்கலாகாது. இப்படிக்கு உத்தரவு பண்ணி

அநேகம் நாளான போது அவருக்கும் நிசமில்லாதபடியினாலே யும், சிக்காரெக்கைக்கும் தமாஸ்கரிய முண்டானபடியினாலே யும் அறுபத்து நாலு கிராமமும் கூடி நினைத்தார். நமக்கு இந்த ராச்சியத்தை ரட்சிக்கிறதற்கு ஒரு க்ஷத்திரிய ராசாவைச் சம்பாதிக்க வேணுமென்று எண்ணிக்கொண்டு, எல்லோரும் கூடி, பரதேசத்துக்குப் போய், ஒரு ராசாவை அழைத்துக் கொண்டு வந்து, கொடுங்கல்லூரிலே பெருங்கோவிலகம், அல்லது அரண்மனை கட்டி வைத்து, சேரமன் பெருமாள் (பெருமாளாய்) அதிபதியாய், சிக்கா ரெக்கை பண்ணுகிறதற்கு ராச்சியாபி ஷேகம் பண்ணினார்..........பென் பிறந்தால் பிராமணர்தானே விவாகம் பண்ணும்படிக்கு உத்தரவு பண்ணினார். இப்படிக் காலம் அநேக நாளான போது, ரெக்கைக்கு அவநிசமாய்க் கண்டதனாலே பெங்களை ஒப்பித்து, இனிமேல் ரெக்காசிக்கை பண்ணவேணுமென்று அறுபத்து நாலு கிராமமும் கூடி சொல்லி, (கழகம் நாவில்)........ ..பினிவிருந்தும், ஒவ்வொரு தளி யாதிரிமாரையும் உத்தரவு பண்ணி வைத்தார். அவருக்கு ஒவ்வொரு (க்ஷேத்திரமும்) வீடும் கொடுங்கல்லூரில் கொடுத்து வைத்துக் கொண்டு, அவரை ஒப்பியாமல் சிக்காரெக்கை செய் யக் கூடதென்றும் உத்தரவு பண்ணினார். கிரகஸ்தரை (அவ ரோதம்) நிச்சயம் பண்ணுவதில்லை.

அன்றைக்கு அழைத்துக் கொண்டு வந்த க்ஷத்திரியனுக் குப் பேர் சேரமான் பெருமாள். சோழமண்டலத்தில் ராசா சோழப் பெருமாள். பாண்டி மண்டலத்து ராசா பாண்டிப் பெரு மாள். இவர்களில் கேரளத்தினில் முன்னே அழைத்துக் கொண்டுவந்த படியினாலே கேரள ராசா வென்று பேராச்சுது.

கேரளத்தில் பதினேரு அஞசாரம். பரதேசத்தினில் இரு பத்திரண்டு அஞசாரம். ராசாவைக் கொண்டு வந்து வைக்கிற போது பிராமணர் கைப்பிடித்து பண்ணின சமயம் அல்லது சத்தியம் எங்களாலே சாத்தியமல்லாதவைகளைச் சத்தியம் பண்ணி ரட்சிக்கவேணும். நாங்கள் அநியாயமாய் ராச்சியகாரியங் களைத்தானே பண்ணினேமானாலும் நீங்கள் என்னை நேமித்த தன்பிறகு, நீங்கள் தாமே பண்ணுகிறது ஏன் என்று ராசா பிராமணரைக் கேட்கலாகாது. ஆகையினாலே இப்பவுமோர் ஆபத்துகளுண்டானால் நீங்கள் ஏன் (பிராதியா) [பிராது] பண்ண வில்லையென்று....................பிரபுக்கள் இப்பவும் கேட்பதில்லை.